# சத்திய வேத பாதுகாவலன்


Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 16-ம் இலக்கம்


# அர்ச். சூசையப்பரின் அந்தரங்க சீவியம்



ஆரியமொழியிலே வளனென்று அழைக்கப்படுகின்ற அர்ச். சூசை மாமுனிவர் ஏகாந்தமாகச் சஞ்சரித்து மறைந்தவாழ்க்கை நடத்திவந்தார். தமதுகடமையென்று கண்டுணரும்போது தான் அவர் உலகசஞ்சாரத்தை நாடிச் சென்றார். மற்றப்படி என்றும் உலகுக்குமறைந்தே சீவித்தார். சேசார்அகுஸ்துஸ் சக்கரவர்த்தியின் ஆணைப்படி பெத்லகேம்நகர் செல்கின்றார். வானதூதனின் ஏவுதற்படி எகிப்துதேசஞ் செல்கின்றார். தமது வேதகடமைக்காக ஜெருசலேமுக்குப் போகின்றார். மற்றப்படி அவர்வேறோரிடத்திலும் காணப்படுவதில்லை. அவர் நகரவிழாக்களிலோ அன்றேல் உலக களியாட்டுகளிலோ ஈடுபடுவதைக் காண்பதில்லை. இவரதுமகிழ்ச்சி நசரேத்தின்தனிமையிலேயே தங்கியிருந்தது.

நமது இன்பமும் தனிமையிலும், அமைதியிலும், ஆண்டவரைத்துதிப்பதிலும் இருக்கின்றதெனக் கூறலாமா? அர்ச். சூசையப்பர் நசரேத்தில்மட்டும் தமது இன்பத்தைக் கடவுளிடத்தும், அவரதுபுதல்வரிடத்தும் பெறுகின்றார். தமது கடமைகளை மகிழ்வுடன்செய்து காலத்தைக் கழிக்கின்றார். கடவுளைத்தியானிப்பதும், புனிதமாகவிருப்பதுமே அவரதுவாழ்க்கை. இவ்விதம் அவர் தமதுஆத்தும சீவியத்தை அர்ச்சிப்பித்தார். அதனால்நாமும் அவரது முன்மாதிரிகையைக் கண்டுபாவித்து உலக இன்பங்களில் எமது மனதைச் செலுத்தாதிருப்போமாக. உலகஇன்பங்களில்எமது மனதைச் செலுத்துவதினால் பல பராக்குகள் உண்டாகி எமது இதயத்தில் பலதுயரங்கள் ஏற்படுகின்றன. அதனால் அவரதுவாழ்க்கையின் லட்சிய குணங்களாகிய தனிமையையும், அமைதியையும் பின்பற்றுவோமாக. அன்றேல்நாம் ஞானவாழ்க்கையில் முன்னேறமுடியாது. அஞ்ஞானசாஸ்திரி ஒருவர் கூறியதை ஈண்டுநினைவூட்டுவது நன்று. "நான் எத்தனை தடவை மனிதருடன் சஞ்சரித்தேனோ அத்தனை தடவை குறைந்தமனிதனாகவே திரும்பிவந்தேன்" "மகாப்பெரும் பரிசுத்தவானையும் உலகின் தூசி அழுக்காக்கும்," என்று பெரியசிங்கராயபாப்பானவர் கூறுகின்றார்.

அர்ச். சூசையப்பர் அரசவம்சத்திலும், புகழ்பெற்ற பிதாப்பிதாக்களின்அடியிலும் தோன்றியவர். அவரே அதிஉந்நததேவனின் இரகசியத்துக்குப் பாதுகாவலராயிருந்து, தமதுஇல்லத்தில் தேவனின்பிதாவாக சங்கிக்கப்பட்டுவந்தார். இப்பேர்ப்பட்ட அளைகடந்த புகழையும், குடும்ப கௌரவத்தையும் அவர் தமது தாழ்ச்சியின்நிமித்தம் மறைத்தார். வேறொருவரென்றால் திவ்வியயேசுவின் கீர்த்திக்காகத் தனது குடும்பகௌரவத்தை வெளிப்படுத்த வேண்டுமென்றும், தானே தேவபாலகனின் கைத்தாதையென்றும் கூறியிருப்பார். ஆனால், சூசையப்பரோ மௌனமாய் இருப்பதே நன்றென எண்ணி ஒருவார்த்தைதானும் தமது நன்மைக்காகவோ, அல்லது தேவபாலனின் நன்மைக்காகவோ, கூறாதிருந்துவந்தார். உலகத்திற்குத் தமதுகுமாரனைத் தெரிவிப்பது தேவபிதாவின் கடமையெனநினைத்து மௌனமாயிருந்தார். ஒருசிநேகிதனுக்கோ அல்லது ஒருஅயலானுக்கோ இந்தப்பரமஇரகசியத்தை அவர் கூறவில்லை. அவரது சிறந்த மௌனமே முப்பதுவருடம் முடிந்தபின்னரும் யேசுதேவன் சாதாரணதச்சன் சூசையப்பரின் மகனென்று உலகமக்கள் நினைக்கச்செய்தது. என்னஅதிசயமான மௌனம்! சூசையப்பர் தமது இல்லத்தில் கவர்ச்சிக்குரிய பரம்பொருளை உடையவராகவிருந்தும் உலகத்தவர்ஒருவருக்கும் அது தெரியவில்லை. அவரும் இது பற்றி ஒன்றும்கூறவில்லை. மூவிராசாக்களும், பெத்லகேமின் இடையர்களும்வந்து திவ்வியபாலனை ஆராதித்தனர். சிமியோனும், ஆனாளும் யேசுதேவனின் மகிமையைப்பாராட்டியபொழுதும் சூசையப்பர் ஒன்றும் கூறாமல் மௌனமாய் இருக்கின்றார். அவர் திவ்வியபாலனது தெய்விக பிறப்பின் இரகசியத்தைச் சம்மனசானவர்மூலம் அறிந்திருந்தும், அதற்குச் சாட்சியாயிருந்தும் மௌனமாய் இருக்கின்றார். எந்தப்பிதா இதைப்போன்ற ஆச்சரியத்துக்குரிய மகனைப்பற்றி மௌனமாய் இருந்திருப்பார்? சூசையப்பர் மிகுந்தகவனத்துடனும், நம்பிக்கையுடனும் இந்த இரகசியத்தைத் தமது மரணமட்டும் எவரிடமும் கூறாமல் தமக்குள் அந்தரங்கமாய் வைத்திருந்தார். இந்தமகத்தான மௌனம் நமக்கு ஓர்நல்லபாடத்தைப் படிப்பிக்கின்றது. நாம் நம்மைப்பற்றி ஒருபோதும் பெருமையாகக் கூறக்கூடாது. அத்துடன் நாம்செய்யும்கருமங்களை உலகமகிமைக்காகச் செய்யப்படாது.

கடவுளின் கண்களுக்குப் பெரிதாகத்தோன்றிய இம்மகாபுருஷர் உலகத்தாருக்குத் தமது பெருமையைக் காட்டாதிருக்கின்றார். அயலார்சிலர் மட்டும் அவரை ஓர்ஏழைத்தச்சனென அறிந்திருந்தனர். அரசமாளிகையில் அரசனாக இருக்கவேண்டியவர் ஓர் எளிய குடிசையில் வாழ்கின்றார். எக்காரணத்திற்காக இவ்விதவாழ்க்கையை அவர் நடத்தினாரென்று நாம்வினவினால் எமதுஇருதயத்தில் அதற்கான விடை அவரிடமிருந்து பின்வருமாறு தோன்றும். "நாள்தோறும் எனது கண்கள்முன்பாகக் கடவுள் அற்பமனிதராகச் சீவிப்பதைக்கண்டேன்; இவ்வித அற்ப வாழ்க்கை நடத்தியவரை மோட்சவாசிகள் நடுநடுங்கிக்கொண்டு ஆராதிக்கின்றனர். இவர் ஒருசொல்லுச் சொன்னாலே போதும் சம்மனசுகள் மின்னலிலும் கூடியவேகத்துடன் அவர் சொல்லியபடி செய்வர். இதை அறிந்தபின்னும் உலகில் ஒருமனிதன் தன்னைப்பெரியவனாக மற்றவர்களுக்குக்காட்ட விரும்புவது மூடத்தனமே. தன்னையே மறந்து வாழும் அந்தரங்கவாழ்க்கையே எனக்கு உண்மையான கீர்த்தியைக் கொண்டுவருகின்றது. எனதுமுன்னோரின் மகத்துவமுள்ள வாழ்க்கையைவிட்டு என்னை இந்தக்கீழ்நிலைமைக்கு கொண்டுவந்ததற்காக நான் ஆண்டவரைப் புகழவேண்டும். அரசரின் மாளிகைகளைவிட எனது தாழ்ந்த சிறிய குடிசையே பெரிது. அரசரின் அறுசுவையுள்ள சாப்பாட்டைவிடவும், பலவர்ணமுள்ள உடுப்பைவிடவும் எனதுசாதாரண உணவும், உடுப்புமே எனக்குப் பெரிது" என்பதே.

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

(திரிகோணமலை மேற்றிராசன நல்லாயராகிய மகாவந். இக்னேஷஸ் கிளென்னி ஆண்டவர் அவர்களால் கடந்த 30-3-59-இல் பரிசுத்தமரிய நாயகிதேவாலயத்தில் வண. எட்வேட் விறெடி, வண. யோசேப் டிகொணி ஆகியோர் குருத்துவாபிஷேகம் செய்யப் பெற்றதை நினைவுகூருகிறோம்.)

### புதிய குரவர்களின் திவ்விய பலிபூசை

அன்று 6-4-59 திங்கட்கிழமை தேவதாய்க்கு மங்களவார்த்தை சொல்ல வானுலகிலிருந்து சர்வேசுரன் தேவதூதனை கபிரியேல்சம்மனசை அனுப்பிய நன்னாள். அதே நாளே ஞானப்பிள்ளைகளான எமக்கும் தமது அன்பையும், ஆசீரையும் அருளும்படியாகத் தமதுபிரதிநிதியாகிய வண. எட்வேட் விறெடி சுவாமியவர்களை எமது பங்கிற்கு அனுப்பிய பாக்கியமான நாள்.

காலை 6மணிக்குத் தங்கள் தவப்புதல்வரான சுவாமியவர்களின் நன்னாளைக் கண்டுகளிப்பதற்காக அமெரிக்காவிலிருந்து இங்குவந்த தாய்தந்தையர்சமேதராய் எமதுகட்டளைக்குரவர் வண. ஈ. எல். வம்பேக்சுவாமியார், பத்திச்சபை அங்கத்தினர், மற்றும் கிறீஸ்தவர்கள் ஆலயத்தில்குழுமியிருக்கப் புதியகுருவானவரால் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. பூசைமுடிவிலே அவரால்ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகத் திருக்கரஆசீர்ந்து, ஞாபகச் சின்னங்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து எமது கட்டளைக் குரவரால் புதியகுருப்பிரசாதிக்கும், பெற்றோருக்கும், நண்பர்களுக்கும் காலைப்போசனம் பரிமாறப்பட்டது.

அடுத்து 11-4-59சனிக்கிழமை பத்திச்சபையாரின் தினமன்று வண. யோசேப் டிகொணிசுவாமியவர்களால் பாட்டுப்பூசை நிறைவேறியது. எமது கட்டளைக்குரவரால் "மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே" எனும் தலையங்கத்தில் தேவதாய் நம்மீது கொண்டுள்ள அன்பையும், அவள்மீது வைத்த அன்பிற்குப் புதியகுருவானவர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவதையும் எடுத்துக்கூறி அனைவரையும் சிந்தனைக்குள்ளாக்கினர். பூசைமுடிவில் புதிய குரவரால் அனைவருக்கும் திருக்கரஆசீர்ந்து ஞாபகசின்னங்களும் வழங்கப்பட்டபின் கட்டளைக் குரவரால் காலைப்போசனம் பரிமாறப்பட்டது. இருதினங்களிலும் விசுவாசிகள் திருவிருந்தில்பங்குபற்றி, இருகுரவர்களினதும் ஆத்தும, சரீர நன்மைகளுக்காகமன்றுடி வணக்கம்தெரிவித்தனர்.

### ஆறுவதுஆண்டு நிறைவுவிழா

எமதுபங்கிலேசதாசகாயமாதாவின் பேரில் செபவேண்டுதல்கள் ஆரம்பமான ஆறுவதுஆண்டுநிறைவுவிழா கடந்த15-4-59-இல் நடந்தேறியது. அன்றுகாலை வண. கட்டளைக்குரவரால் தேவதாயாருக்கு நன்றியறிந்ததோத்திரமாக ஓர்பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது.

மாலை6மணிக்குச் செபமாலை, வேண்டுதல் செபங்கள், பிரார்த்தனையின்பின் கட்டளைக்குரவரால் சதாசகாயமாதா எமதுபங்கிற்குநல்கிய பேருபகாரங்களையும், மேன்மேலும் சதாசகாய மாதாவிலே பத்தியும், நம்பிக்கையும் ஓங்கிவளரவேண்டிய அவசியத்தையும் விளக்கி அரியதோர்பிரசங்கம் செய்யப்பட்டது. அதன்மேல் மாலை ஆராதனை பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. ஆசீர்வதிக்கப்பட்ட ரொட்டி பக்தர்களுக்குப் பரிமாறப்பட்டது.

### கன்னிகா உடை தரித்தல்

எமதுபங்கைச்சேர்ந்த தேவசகாயம் செபஸ்ரியான் தம்பதிகளின் புதல்வியும், பரிசுத்த கார்மேல்மாதாசபையைச்சேர்ந்தவருமான சங். சகோதரி மேரிஎலிசபெத் அவர்கள் 16-4-59-இல் தென்னிந்தியாவிலுள்ள (மங்களூர்) கன்னிகாமடத்தில் துறவறஉடை பெற்றுள்ளார். இதைமுன்னிட்டுப் பரிசுத்த கார்மேல்மாதாவுக்கு நன்றியறிந்த தோத்திரமாக ஓர்பாடற்பூசை எமது கட்டளைக்குரவரால் இங்கு (மட்டக்களப்பு) ஒப்புக்கொடுக்கப்பட்டது. பலரும் திவ்வியபலிபூசையில் பங்குபற்றித் திருவிருந்தருந்தி, ஞானச்சகோதரிக்காகச் செபித்தனர். "கன்னியாஸ்திரிகளுடைய இராக்கினியே! உம்மிடம் சரணடைந்த ஞானச்சகோதரியை ஆசீர்வதித்தருளும்!

— பங்குக் கிறீஸ்தவன்.

உரோமைக் கடிதம்

# புனிதர்கள் வரிசையிலே புதிதாக இருவர்

*இறை அன்பில் உயர்ந்த உத்தமர்கள், நம் மறை ஒன்றிற் பெறும் இறவாப் புகழ்.*

இங்கு அழகிய செயற்கை நீர்ஊற்றுகள் ஏராளமாக உண்டு. வீடுகளிலும் சரி, வீதிகளிலும் சரி, இவற்றிற்குக் குறைவேயில்லை. இந்த எழில்நகரை நீர்ஊற்றுகளின்நகர் என்று சிலர் அழைப்பர். இவைகளில் இரண்டு நீர்ஊற்றுகள் மற்ற எல்லாவற்றின் அழகையும் மறைத்து நிற்கின்றன. புனித பேதுருவானவர் மகா ஆலய சதுக்கத்திலே ஒன்று வலதுபுறமும், மற்றது இடதுபக்கமுமாக உள்ளன.

### நீர்ச்சுனையும் அருட்சுனையும்

ஆயிரமாயிரமான மக்கள் அவைகளைப் பார்க்கின்றார்கள். அவற்றின் வெளித்தோற்றத்தை—மனங்குளிர வைக்கும் எழிலைக்கண்டு இன்புறுகிறார்கள். ஆனால், அவைகள் எதன் சின்னங்களாய் உள்ளன என்பதைச் சிந்திப்பார்களா? அந்தநீர்ச்சுனைகள் தண்ணீரை வெளியே சிதறியவண்ணம் இருக்கின்றன. அதேபோல் பரிசுத்ததிருச்சபையும் புனிதர்களைச் சுரந்துகொண்டே இருக்கின்றது. நீர்ச்சுனைகளைப் பொறுத்தவரையில் காலத்தைப்பற்றிய வேறுபாடுகிடையாது. பகலாக இருக்கலாம், இரவாக இருக்கலாம், இரண்டாம் நூற்றாண்டாக இருக்கலாம், இருபதாம்நூற்றாண்டாக இருக்கலாம், நீர்போக்கிக் கொண்டே இருக்கின்றன. அவ்வாறு நம்திருமறை அன்னையும் புனிதவீரர்களை அளித்துக் கொண்டே இருக்கிறது. பிறந்தநாட்தொட்டு இதுவரை உத்தமர்களை அது உருவாக்கிக் கொண்டே இருக்கும். இம்மாதம் பன்னிரண்டாம்நாள் இங்குநடந்த திருச்சடங்குகள் இதற்கு அத்தாட்சியாக அமைகின்றன. திருமறைப் புனிதர்களின் அதிகாரபட்டியலில், அர்ச். சாள்ஸ் டா செஸ்ஸே, அர்ச். ஜோக்கீனு டெ வெட்றூனு என்பவர்களின் பெயர்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு வழுவாவரமுத்திரைகள் பதிக்கப்பட்டுள.

### சித்திரை 12 :

பாப்பரசர் 23-ம் அருளப்பர் இவ்விருவருக்குந்தான் முதன்முதலாக அர்ச்சியசிட்ட பட்டம் அருளுவாரென்று செய்தி வெளியானது. சித்திரையில் நடக்கும் திருச்சடங்குகளுக்குப் பங்குனிமாதமே மக்கள் சீட்டுவாங்கத் தொடங்கிவிட்டார்கள். இம்முறை ஆலயத்தினுள்போகச் சீட்டுத் தேவைப்படவில்லை. நல்லஇடங்கள் பெறுவதற்கு மாத்திரம் சீட்டுவழங்கப்பட்டது. மக்கள் காலைஆறுமணிக்கே ஒருவர் இருவராக வரத்தொடங்கிவிட்டார்கள். எட்டு மணிக்குக் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்துகொண்டிருந்தனர். குருத்துவமாணவர்கள், குருப்பிரசாதிகள், மேற்றிராணிமார்கள், குடும்பத்தவர்கள், பாடசாலைச்சிறுவர்களாக இப்படிப்பலதரப்பட்டவர்கள், அர்ச்சியசிட்டபட்டம்பெறுபவர்களின் சபைகளைச் சேர்ந்தவர்கள் விளம்பரங்கள் ஏந்தியபடி வந்தார்கள். ஊர்பார்க்கவந்திருந்த வெளிநாட்டவர்கள்தொகையும் அதிகம். சீட்டு ஒன்றுமே இல்லாதவர்கள்பாடு துன்பக்கதைதான். கடைசி மூலையில் நிற்க வேண்டும். பாப்பரசரின் வருகையை மாத்திரம் இவர்கள்பார்க்கலாம். பீடத்தில் என்னநடக்கிறது என்பதைக் கேட்டறியலாமொழியப் பார்த்தறிய முடியாது. ஆலயம் பகுதி பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தடைகளைக் கடந்து செல்லமுடியாது. நடுவே துப்பாக்கிஏந்திய வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

### ஓசான்னா! ஓசான்னா!!

நாலு அழகியபடங்கள் ஆலயத்தின் நடுவில் மாட்டப்பட்டிருந்தன. அவ்விரு புனிதர்களினதும் உதவியால் நடந்த நாலு புதுமைகளினதும் விளக்கங்களே இவைகள். ஒருவாரத்துக்கு முன்கூட்டியே இவைகள் ஏற்றப்பட்டிருந்தன. வலதுபக்கத்தில் இருக்கும் பேதுருவானவரின் சுரூபம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிரசில் மும்மகுடம் இலங்கிக்கொண்டிருந்தது. பாப்பரசரின் பீடத்தைச்சுற்றி மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருந்தன. சடுதியாக ஆலயம் ஒளிமயமாக மாறியது. 'பக், பக்' என்று மேலேயிருந்த மின்சார வெளிச்சங்கள் ஏற்றப்பட்டன. கைக்கடிகாரம் எட்டரைமணியென்று காட்டியது. ஆலயத்தின் நடுவே சிலர் வரிசையாக நகர்ந்து வந்தனர். புனித பிரான்சிஸ் சபையைச்சேர்ந்த குருமார், வெவ்வேறு துறவற சபைகளைச் சேர்ந்த அதிபர்கள், குருமாணவர்கள், துறவிகள், பிரபுக்கள், பாப்பரசர்மன்றத்தின் குழுவினர், சுவிஸ் வீரர்கள் தங்களுக்கே உரிமையான அழகிய உடைகளுடனும், கம்பீரநடையுடனும் வருவது எப்போதும் பார்க்கக்கூடியது அல்ல. இடையிடையே சிலர் பெரிய சீலைப்படங்களையும் தூக்கி வந்தார்கள். ஒருபடத்தில் ஜோக்கீனு தாயாருக்குத் தேவஅன்னை காட்சியளித்தது தீட்டப்பட்டிருந்தது. எழுந்தேற்ற வேளை நற்கருணை நாதரின் கதிர்கள் புனிதர் சாள்ஸின்மார்பிலே காயம் விளைப்பதாக இன்னொன்று சித்திரித்திருந்தது. ஆலயத்தின் பின்புறத்தில் கரகோஷம் செய்யும் சப்தம் கேட்டது. "பாப்பரசர் வாழ்க" என்ற வாழ்த்தொலிகேட்டது. ஆனால், அவரை மட்டும் காணமுடியவில்லை. கண்கவரும் உடையணிந்தவீரர்கள்தான் வந்துகொண்டிருந்தனர். மக்கள்எல்லோரும் பின்பக்கமாகவிழியைவைத்திருந்தனர். சப்தம் வரவர உரமாகிக் கொண்டேவந்தது. அதிலும் உரமாக, இனிமையாகப் பன்னிரு வெள்ளி எக்காளங்கள் இசைமுழக்கின. முடிமன்னர் வருகின்றார்என்று முரசறைந்தன. அப்போதுதான் பாப்பரசரைப் பார்க்க முடிந்தது. கருதினால்மார், மேற்றிராணிமார், பிரபுக்கள், படைத்தலைவர், சுவிஸ்போர்வீரர், பலற்றைன் காவலர் திரளாகவந்தார்கள். அவர்கள்மத்தியில் வலதுகரம் ஆசீர்வதித்த வண்ணம் சிம்மாசனத்தில் சுமந்து கொண்டுவரப்பட்டார் பாப்பரசர். "பாப்பரசர்வாழ்க," "பாப்பரசர்வாழ்க" என்றவாழ்த்தொலி ஒருபக்கம், கரகோஷஞ் செய்பவர்களின் ஆரவாரம் இன்னொருபக்கம். இம்மகிழ்ச்சி நிறைந்த வரவேற்பைக் காணும்பொழுது, "சர்வேசுரனுடைய நாமத்தினாலே வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர், ஓசன்னா!" என்ற வேதவாக்கியம் உள்ளத்திலே எழும்புவது இயல்பானது, தடுக்கமுடியாதது. இடையிலே திவ்வியநற்கருணை வைக்கப்பட்டிருக்கும் சின்னக்கோவிலுக்குப் பாப்பரசர் கொண்டு செல்லப்பட்டார். திரும்பவும், ஆலயத்தின்நடுவாக ஆசனத்தில் அமர்ந்து நடுப்பீடத்தை அடைந்தார். பீடத்தின் அடித்தளத்தில் முழங்காற்படியிட்டுச் செபித்தபின் சிம்மாசனத்திற்குச் சென்றார். அங்கு சிலகருதினால்மார், மேற்றிராணிமாரிடமிருந்து 'கீழ்ப்படிதல்' வாக்கைப் பெற்றார். ஒவ்வொருவரும் குறிக்கப்பட்ட இடங்களில் அமர்ந்தார்கள். பீடத்திற்கு முன்பாகவும், சூழவும் சுவிஸ் வீரர்கள் அணிவகுத்து நின்றார்கள்.

— வண. நீ. மரியசேவியர் —

### வேண்டுதல்கள் :

எல்லோரும் அமர்ந்தபின், அர்ச்சியசிட்ட பட்டத்தின் நிர்வாகஸ்தர் மற்றும் இருவருடன் பாப்பரசரின் சிம்மாசனத்திற்குச்சென்றார். பரிசுத்த தந்தைமுன் முழங்காற்படியிட்டபின் "அதிபரிசுத்த தந்தையே! இங்குசமுகமாயிருக்கும் மகாமேன்மைதங்கிய கருதினால் கயித்தான்ஆண்டகை அவர்கள் முத். சாள்ஸையும், முத். ஜோக்கினாவையும் நமது ஆண்டவரான யேசுக்கிறீஸ்துநாதரின் பரிசுத்தர்களுடைய அட்டவணையிலே பொறித்தருளுமாறு கெஞ்சிக்கேட்கிறார்; சகல கிறீஸ்தவவிசுவாசிகளாலும் இவர்கள் அர்ச்சியசிட்டர்களைப்போல் பூச்சியம் பண்ணப்பட வேண்டுமென்று பணித்தருளுமாறும் கேட்டுக் கொள்ளுகிறார்" என விண்ணப்பஞ் செய்தார். சிம்மாசனத்திற்கு அருகில்நின்ற மற்றும் ஓர்கருதினால் அதற்குப் பதிலளித்தார். "முத்திப்பேறு பெற்றபட்டம் பெற்றவர்களின் புண்ணியக் கிரியைகளினாலும், எமது கர்த்தரால் அவர்களுடையபுகழ் ஒளிவீசச்செய்யும் புதுமைகளாலும் பரிசுத்தபிதா மனமகிழ்கின்றார்; ஆனால், முக்கியமான இக்காரியத்தில் எவ்வித முடிவையும் அடையுமுன்பு பரிசுத்த கன்னி மரியாயினதும், மோட்சவாசிகளினதும் உதவியைக்கேட்பதில் விசுவாசிகள் தம்முடன்ஒன்றுசேர வேண்டும்என்று பாப்பரசர் விரும்புகிறார்" என அறிவித்தார். அதன்பின் எல்லோரும் முழங்காலில் இருந்தார்கள். இசைபாடகர்கள் சகல அர்ச்சியசிட்டவர்களின் பிரார்த்தனையைப் பாடினார்கள், அதற்கு ஆலயத்திற் குழுமியிருந்த மக்கள் எல்லோருமே பதில் அளித்தார்கள். இது முடிந்ததும், எல்லோரும் தத்தம் இடங்களில் அமர்ந்தார்கள். விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தவர்கள் மற்றும்ஓர்தரம் பாப்பரசரிடம் சென்றார்கள். முன் வாசித்ததையே திரும்பவும் வாசித்தார்கள். ஆனால், ஒருசொல்லின் கருத்துமாத்திரம் மாற்றப்பட்டது அது "கெஞ்சி" என்ற சொல். "மிகவும் கெஞ்சி" — "அதிமிகக் கெஞ்சி" என்ற

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## பாப்பரசருக்குப் பாலியரின் வேண்டுகோள்

தங்களுடைய திவ்வியபூசைக்கு நாங்கள் உதவி செய்யக் கூடுமா என்று இருபாலியர்கள் சமீபத்திலே பாப்பரசருக்குச் செய்த வேண்டுகோளுக்கு அவர் சம்மதியளித்திருக்கின்றார். வட இத்தாலியிலே கிறெமா எனுமிடத்தில் வசிக்கின்ற 9 வயதுடைய என்சோ பேர்பெற்றி — 11 வயதுடைய சேர்ஜியோ குறுப்பி என்ற இப்பாலியர்கள் இருவரும் தற்போது ரோமாபுரியைத் தரிசிக்க ஆயத்தப்படுகின்றனர். பாப்பரசர் இவர்களுக்கு அனுப்பிய பதில் கடிதத்திலே அவருடைய ஆசீர்வாதமும், பிரதிமைப்படமும் அடங்கியிருந்தன.

---

## பிரான்சீஸ்கன் சபையின் 750-ம் ஆண்டுவிழா

பிரான்சீஸ்கன் சபை ஸ்தாபகமான 750-ம் ஆண்டு நிறைவு விழாவின் ஞாபகார்த்தமாக அச்சபையின் அதிசிரேஷ்டரான வண. அகஸ்ரீனோ செபின்ஸ்கி சுவாமிகளும், மற்றும் அதைச் சேர்ந்த அதிகாரிகளும் வருகிற வைகாசிமாதம் 16-ந்திகதியன்று பரிசுத்த பாப்பரசரிடம் தரித்திரம், விரத்தத்துவம், கீழ்ப்படிதல் என்னும் வாக்குத்தத்தங்கள் மூன்றையும் புதுப்பிக்க விருக்கின்றார்கள். இந்த வைபவமானது இச்சபை ஒழுங்குகளை அங்கீகரித்த மூன்றாவது இன்னொசெந்து எனும் பாப்பானவருக்கு 1209-ம் ஆண்டு அசிசிநகர் அர்ச். பிரான்சீஸ்கு வாக்குத்தத்தங்கள் கொடுத்ததை ஞாபகப்படுத்துவதாகும். வண. செபின்ஸ்கி சுவாமிகள் கொடுக்கும் வாக்குத்தத்தங்கள் அவர் பேராலும், பிரான்சீஸ்கன் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று கிளைச்சபைகள் பேராலும் கொடுபடுவனவாயிருக்கும்.

---

## கம்யூனிஸ்த அதிகாரிகளுக்குப் புத்தி பிறந்தது

பேர்லின் நகரிலிருந்து மேற்கே 75 மைல் தூரத்திலுள்ள சான்டோ எனும் கிராமத்தில் இருந்துவந்த ஒரேயொரு கத்தோலிக்க கோவிலை மூடிவிடும்படியாகக் கிழக்கு ஜேர்மனியின் கம்யூனிஸ்த அதிகாரிகள் விடுத்த கட்டளையை இப்போது நிறுத்திவிட்டிருக்கின்றார்கள். இதற்குக் காரணம், இந்தக் கோவிலைக் கம்யூனிஸ்தர்கள் அபகரித்துக் கொண்டதை எதிர்த்துச் சுதந்திர உலகில் சண்டமாருதம்போல் எழுந்த கண்டனங்களும், ஆட்சேபனைகளுமேயாகும். இந்தக் கிராமக்கோவிலை மூடியதும் ஜேர்மனியிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் கண்டன தந்திகள் சான்டோ கிராமத்திற்போய்ச் சரியலாயின. அதன்மேல்தான் கம்யூனிஸ்த அதிகாரிகளுக்குக் கண்திறபட்டு, அக்கிராமத்திலுள்ள ஒரேயொரு கோவிலை மூடுவதானது சமயானுட்டான சுதந்திரத்திற்குரிய மக்களின் அரசியல் உரிமைகளுக்குப் பங்கம் உண்டுபண்ணக்கூடாதென்ற புத்தி பிறககலாயிற்று.

# மகாராணியாரின் தாயாரும், மார்கறெற் இளவரசியும் பாப்பரசரைச் சந்தித்தனர்

பிரித்தானியமகாராணியாரின் தாயாரும், இவர் புதல்வியான மார்கறெற் இளவரசியும் பாப்பரசரது பரிவாரங்களின் பல் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த கோலாகல வைபவங்கள் மத்தியிலே சென்ற 22-ந் திகதி புதன்கிழமை அந்தரங்க பேட்டி ஒன்றில் அருளப்ப பாப்பரசருடன் 20 நிமிஷங்கள் செலவிட்டார்களென வத்திக்கானிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. பேட்டியின்போது பாப்பரசர் தமது இராசதரிசகர்களுடன் பிரித்தானிய சாம்பிராச்சிய பிரச்சினைகள்பற்றிக் கலந்துரையாடினரென்றும், மகாராணியாருக்கும், இராச குடும்பத்துக்கும் தமது உச்சித நல்லாசிகளைத் தெரிவித்தாரென்றும் வத்திக்கான் அதிகாரிஒருவர் அறிவித்ததாகவும் செய்திகிடைத்துள்ளது. பேட்டிமுடிவிலே இராசதரிசகர்கள் இருவரும் கிளெமென்ரின் மண்டபத்தில் கூடியிருந்த பிரித்தானிய — அதன்சாம்பிராச்சிய மாணவர்களின் குழுவொன்றால் உரத்த குரற்தொனியிலே ஆர்ப்பரித்து வாழ்த்தப்பெற்றமை பெரிதும் மனவுருட்சி உண்டுபண்ணுவதாயிறறு. மகாராணியாரின் தாயார் அம்மாணவர்களுக்கு இடைநடுவாகச் சென்று அவர்களில் அநேகருடன் சம்பாஷித்தார். பேட்டியின்போது தரிசகர்கள் இருவரும் நீண்ட கருமையான பின்னற்கரையைக் கொண்ட அங்கிகளும், கருமையான பின்னற்கரையைக் கொண்டனவாய்ச் சிரசை மூடித் தோள்களில்தொங்கிய மேலங்கிகளையும் அணிந்திருந்தார்கள். இருவரும் பேட்டிக்குச்சென்று நூல்நிலையத்தை அணுகியதும் வெண்மையான அங்கியும், வெண்மையான கபாலக் குல்லாவும், சிவப்புப் பாதரட்சைகளும் அணிந்திருந்த அருளப்ப பாப்பரசர் அவர்களை வரவேற்குமாறு எதிர்கொண்டு கதவண்டைசென்றார்.

—※—

## பாத்திமாபதிச் சிற்றாலயம்

பாத்திமாபதியிலே காட்சிகள் அருளப்பட்ட ஸ்தலத்திலுள்ள சிற்றாலயத்திலே கடந்த 37 வருடங்களிலும் முதன்முறையாகத் தற்போது திவ்வியபூசை நிறைவேறுவதில்லை. இதற்குக் காரணம், பரக்க நடைபெற்று வரும் மாற்றங்களேயாகும். போர்த்துக்கேய பிள்ளைகள் மூவருக்கும் தேவதாயார் காட்சியளித்த இடத்திலே இருந்துவந்த பாத்திமாநாயகியின் திருச்சுரூபம் மகாதேவாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. திருசேத்திரத்திலே அற்புதமாகக் குணமடைந்த நோயாளரால் கைவிடப்பட்டிருந்த கக்கதண்டங்கள், ஊன்றுகோல்கள் ஆதியன நூதன பொருட்காட்சிச் சாலையில் கொண்டுபோய் வைக்கப்பட்டிருக்கின்றன.

---

## போலாந்தும் கம்யூனிஸமும்

திருச்சபைக்கு அடுத்தபடியாகப் போலிஷ் கிராமமக்கள் போலாந்திலே கம்யூனிஸத்தின் முன்னேற்றத்துக்கு மிகப்பெரும் முட்டுக்கட்டையாய் இருந்துவருகிறார்கள். அவர்கள் தங்கள் அரசாங்கத்தின் பல்வேறு விவசாயத் திட்டங்களுடன் இசைந்துபோகாமலும், ஒத்துழையாமலும் நின்று வெற்றி கண்டிருக்கிறார்கள். "கூட்டுக் கமங்களுள் கிராமமக்களைப் பலவந்தமாகப் புகுத்த இனிமேல் ஒருபோதுமே அரசாங்கம் முயலமாட்டாது" எனச் சென்ற பங்குனிமாதம் 14-ந் திகதி சனிக்கிழமை அவர்களுக்கு உறுதிவாக்கு அளிக்கப்பட்டபோதுதான் அவர்களின் மாபெரும்வெற்றி ஈட்டப்படலாயிற்று. போலிஷ் கிராமமக்களில் ஒருசிறு விகிதமானோரே அங்கு கம்யூனிஸ்த கட்சியில் சேர்ந்து அற்ப செல்வாக்கைக் கொண்டிருக்கின்றனர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. போலிஷ் கம்யூனிஸ்த கட்சியின் தலைவரான கொமுல்கா தனது சோவியற் எசமானர்களுடன் போலாந்து கட்டுப்பாடாய்ச் சேர்ந்திருப்பதாகவும், மேற்கு ஜேர்மனியை விரோதிப்பதாகவும், யூகோசிலேவியாவின் நவீனமாதிரிக் கம்யூனிஸத்தை வெறுப்பதாகவும் உலகத்துக்குப் பறைசாற்றுவதிலே ஊக்கமாக ஈடுபட்டுவருகின்றார். ஆனல், போலாந்தில் நடப்பவைகளை — விசேஷமாக ருஷியாவின் கொள்கையாலே கம்யூனிஸ்த கட்சி அங்கத்தவர்கள் தொகை மூன்றுலட்சம்பேரால் குறைந்திருப்பதை அவர் மூடிமறைத்து வருகின்றார்.

---

## அர்ச்சியசிட்டர்களின் தொட்டில்

இத்தாலியிலே தூறின் நகரிலிருந்துபோன ஆஸ்பத்திரி நேர்ஸ்மாருக்குச் சமீபத்திலே பரிசுத்தபிதா பேட்டியளித்துப் பேசியபோது: இத்தாலியிலே அவர்கள் இருந்துவந்த பிரதேசமானது சென்ற நூற்றாண்டிலே திருச்சபைக்கு நான்கு அர்ச்சியசிட்டர்களைக் கொடுத்ததென்று அதனைப் புகழ்ந்து போற்றினர். சலேசியன்சபையை அடியிட்டவரான அர்ச். ஜோண்பொஸ்கோ, அர்ச். யோசெவ் கபாஸோ, அர்ச். தொமினிக் சாவியோ, அர்ச். யோசெவ் கொட்ரோலெங்கோ என்று அந்நால்வருடையவும் நாமங்களைப் பாப்பரசர் எடுத்துக்கூறினர். நேர்ஸ்மார் செய்துவரும் பணியையிட்டு அவர்களுக்கு வாழ்த்துக்கூறி, பிறர்சிநேகம் என்பது பொறுமை, பொறுதியளித்தல், தன்னை மறுதலித்தல் என்று பொருள் தருவதாக அவர் குறிப்பிட்டார்.

## தாம் அஞ்சுகின்றீர்! நம்மைப்பற்றி என்ன?

ஐக்கிய அமெரிக்க தேசத்துக்குப் புதிய அப்போஸ்தலிக்க ஸ்தானாபதியாக நியமனஞ் செய்யப்பெற்றுள்ள வாக்னெஸ்ஸி அதிமேற்றிராணியார் சமீபத்திலே பரிசுத்தபிதாவைப் பேட்டிகாணச் சென்றமையானது, இரு பழைய நண்பர்கள் வத்திக்கானிலே ஒருவரையொருவர் சந்திப்பதாயிருந்தது. அப்போது பாப்பரசர் பரீஸ்நகரிலே ஸ்தானீகராய் இருந்தபோது, அந்த ஸ்தானீகராலயத்தில் அதிமேற்றிராணியார் ஆலோசகராக இருந்துவந்தார். பேட்டியின்பின் அதிமேற்றிராணியார் பேசியபோது: "ஐக்கிய அமெரிக்க தேசத்தில் நம்மை எதிர்நோக்கியிருக்கும் பெரும்பணியைப்பற்றிப் பாப்பரசரிடம் எடுத்துக்கூறினேம்; நாம் அதையிட்டுச் 'சற்றே அச்சம்' கொள்ளுகிறோம்" என்று அவரிடம் அறிவித்தோம். இதைக் கேட்டதும் பாப்பரசர் புன்னகை செய்து, தமது இருகரங்களாலும் தம்முடைய மார்பில் தட்டி, "தமது பெரும்பணியையிட்டுத் தாம் அச்சங்கொள்ளுகிறீர்! அப்போது நம்முடைய பணியைப்பற்றி என்ன?" என்று கூறலாயினரெனத் தெரிவித்துகின்றார்.

---

## நாஸிகள் கொள்ளையடித்த போலிஷ் ஞானப்பொக்ஷங்கள்

இரண்டாவது உலகயுத்தம் நிகழ்ந்த காலத்திலே போலாந்தில் நாஸிகளால் கொள்ளையடிக்கப்பெற்றுப் போலிஷ் கம்யூனிஸ்த அரசாங்கத்தால் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஞானப்பொக்ஷங்கள் திருச்சபைக்குத் தற்போது திரும்பக் கொடுபட்டிருக்கின்றன. இவைகள் 1945-ம் ஆண்டு வியெஸ்பாடெனிலும், கிறஸ்லெயனிலும் கண்டறியப்பட்டு, கிறகோ நகரிலுள்ள வாவெல்கோட்டையிலும், பொஸ்னன் நகரிலுள்ள தேசிய நூதன பொருட்காட்சிச்சாலையிலும் சேமித்து வைக்கப்பெற்றிருந்தன. இந்த ஞானப் பொக்ஷங்களிலே பூசைப் பாத்திரங்கள், கதிர்ப் பாத்திரங்கள், திருப்பண்டங்களைக்கொண்ட சிமிழ்கள், பேழைகள் அடங்கியிருந்தன. இவைகளை ஜினியெஸ்னோ, பொஸ்னன், செல்மோ, லொட்ஸ், புளொக் மேற்றிராசனங்களிலிருந்து நாஸிகள் கவர்ந்தார்கள். இவைதவிரப் போலிஷ் ஞானப் பொக்ஷங்களின் மற்றோர்பகுதியும் திருச்சபைக்குத் திரும்பக் கொடுபட்டுள்ளன. இது கனடா தேச மொண்றியல்நகர வங்கியிலே சேமித்து வைக்கப்பட்டிருந்தது. இதில் கூட்ரென்பேக் பைபிள்ஒன்றும், 17-ம் நூற்றாண்டைச்சேர்ந்த சங்கீத புத்தகம் ஒன்றும் அடங்கும். இவைகள் எல்லாம் வட போலாந்திலே பல்பிளின் எனுமிடத்திலுள்ள செல்மோ மேற்றிராசன குருமடத்துக்குரியன. மூன்றாவது பகுதிஒன்று கனடாவிலே குவெபெக் மாகாண நூதன பொருட்காட்சிச்சாலையில் இருந்துவருகிறது. அம்மாகாண அரசாங்கம் அதைத் திரும்பக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை.

## வைகாசி மாதம்

**பொதுக்கருத்து:** இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் தொண்டில் ஈடுபட்டுள்ள உலகவாசிகளான ஆண்கள், பெண்களுக்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** கன்னிமரியம்மாள்வழியாக முஸ்லீம்கள் அவளது தெய்வீக மைந்தனைப்பற்றிய முழு அறிவையும் அடைவதற்காக மன்றாடிக் கொள்வது.


சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு

சித்திரை மாதம் 30-ந் திகதி


## தொழிலாளியான சூசைமாதவனின் தொண்டராக வாழுவோம்!

நாம் ஓர்தொழிலாளியின் மகனென்றமட்டிலே, எம்முன்னோரும் தொழிலாளிகளென்றமட்டிலே தொழிலாளரான நமது உடன்சகோதரர்களுக்குத் தொழிலாளிகளின் பாதுகாவலரான சூசையப்பரின்திருநாளை முன்னிட்டு ஓர்சுபசெய்தியை விடுக்க முன்வந்துள்ளோம். அர்ச். சூசையப்பர் மகா செல்வ வளம்பொருந்திய தாவீதரசனின் சீரியவம்சத்தில் பிறந்தாராயினும் அவ்வேந்தருக்குரிய செல்வ சம்பத்து யாதொன்றுமில்லாது ஏழ்மையில் பிறக்கவேண்டுமென்பது தேவதிருவுளமாயிற்று. அதனால் அவர் தமது சீவனுதாரத்தைத் தேடத்தக்கதாகக் கைத்தொழில்— அதாவது தச்சுத் தொழில்செய்து வந்தமையால் அவர் ஓர்தச்சரென அறியப்பெற்றார், இன்றும் அறியப்பெற்றுவருகின்றார்.

அம்மட்டா! தாம்திருக்கைத்தாதையாயிருக்கப் பெரும்பாக்கியம் பெற்ற — தம்முடைய குமாரனை எண்ணவும் சொல்லவும் படப் பெரும்பாக்கியம்பெற்ற தேவசுதனே தச்சனின் குமாரனென்று அறியப்பெற்றார். அறியப்பெற்றுவருகிறார். ஓர்தச்சனுயிருந்து, தச்சுத்தொழில் செய்து, அத்தொழிலால்கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு சகலகுடும்பங்களிலும் மேன்மையும், பரிசுத்தமுமான திருககுடும்பத்தைச் சூசையப்பர் சவரட்சணை செய்கின்றார். அதற்குத் தலைமை தாங்குகின்றார். சர்வலோகநாதனை வளர்க்கின்றார். உலகத்தைக் காத்து நடத்துகிறவரைக் காத்துவைக்கின்றார். சகலத்தையும் நடத்துகிறவரை நடத்துகின்றார். பரலோகஇராசாவாலும், பரலோக இராக்கினியாலும் பணிவிடை செய்யப்பெறுகின்றார்.

நசரேத்தூரிலுள்ள அந்தப் புனிதமான தச்சுமாலை நமது மனக்கண்களால் ஊன்றிநோக்குவோம். அங்கே அமைதியான சூழலில் இரு மனிதஉருவங்கள் தங்கள் தொழிலிலே கருத்தாயிருக்கின்றன. அவர்கள் செய்த கலப்பைகள் ஒருபாலும், நுகத்தடிகள் மற்றோர்பாலும், இன்னுஞ்சிலமரத்தளபாடங்கள் இன்னோர்பாலும் காட்சியளிக்கின்றன. ஆம், இவைகள் அவர்களின் கைவேலைகள். நெற்றி வியர்வை நிலத்திற்சிந்த அவர்கள்கஷ்டப்பட்டு உழைத்துக் கண்டபலன்கள். அர்ச். சூசையப்பரும், அவருடைய திருமகனை யேசுக்கிறீஸ்துநாதரும் இவ்விதம் செய்தகலப்பைகளையும், நுகத்தடிகளையும், பிறபொருட்களையும் ஆதித்திருச்சபை காலத்திலே மகாபூச்சியமாகப் பாதுகாத்துக் காட்சிக்குவைப்பார்களென்று பரம்பரையாகக் கூறப்படுமானால் அஃது ஓர் ஆச்சரியமாகுமா?

ஆம், அவைகள் புனிதமான கரங்கள்செய்த பூசிதமானவேலைகள். கள்ளம் கபடில்லாது நேர்மையாகச் செய்யப்பட்ட வேலைகள். தேவ குமாரனும், திருக்கைத்தாதையும் கைதொட்டுச் செய்தவேலைகள். தேவ தோத்திரத்துக்காகவும், தேவ நேசத்துக்காகவும் செய்யப்பட்ட வேலைகள். இவைகளையெல்லாம் தொழிலாளராகிய நாம் இந்த வேளை ஊன்றிச்சிந்திப்போம். தொழில் துறைகளிலெல்லாம் அவரை நமதுமனக்கண் முன்பாகவைத்து — நமது முன்னோடியாக வைத்து நடந்துவருவோம். ஏனெனில், அவர் தேவனுடன் இருந்தார். தேவன் அவருடன் இருந்து அவருடைய வேலைகளை அர்ச்சித்தார். நமது வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும் அவரதுபடங்களை அன்றேல் சுரூபங்களைப் பூச்சியமாகவைத்து, நமது ஆபத்து அவசியவேளைகளிலெல்லாம் அவர்உதவியை நாடுவோம். நாம் தொழிலுக்குப் போகும் போதெல்லாம் அவரையும் நம்முடன் கொண்டுபோகுவோம். அங்ஙனம் கொண்டுசெல்லும் போது, அவர் ஒருகரத்தில் தேவபாலனுடனும், மறுகரத்தில் தூய்மையின் சின்னமாகிய லீலிப் பூங்கொம்புடனும் உடன் வருகிறார் என்பதை நினைவுகூருவோம் அப்போது நாம் எமது பாதுகாவலரின் இணையற்ற வல்லபத்தையும், நிகரற்ற உதவி ஒத்தாசையையும் கண்டுணர்ந்து அவரின் தொண்டர்களாக வாழுவோம்!

---

## தொழிலாளியான அர்ச். சூசையப்பர்

திவ்விய குழந்தைக்கும், தேவதாயாருக்கும் தேவைகள் பல இருந்தன. அத்தேவைகளைத் தொழிலாளியான சூசையப்பர் தமது தச்சுத்தொழிலால் தீர்த்து வந்தார். தொழில் செய்யும் போது அவர்கொட்டிய வியர்வைத் துளிகள் ஆதாமுக்கு இட்ட சாபத்தின் துளியாய் அல்ல, அவரைப் பொறுத்த அளவில் அன்புத் துளிகளாய் மாறின. ஆதியில் வாக்களிக்கப்பட்ட மீட்பரை அரவணைத்து, அவருக்கு அன்னமூட்டியபோது அர்ச். சூசையப்பர் ஆனந்த மடைந்தார். சர்வ ஞானியான திருச்சுதனுக்குச் சன்மார்க்கபோதனை ஊட்டியபோது அவர் சொக்கினார். சர்வதயாபரதேவன் மனுக்குலத்தின் மீட்பில் தமக்கும் ஒருபங்கைக் கொடுத்தார் என்று எண்ணி எண்ணி இன்புற்றார்.

பெற்றோராகிய எமக்கும் பொறுப்பு உண்டு. அது பாரமானது. பராகண்டிதமாய் இருந்தால், பெருந் தீங்கு இழைக்க வல்லது. பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வியை, அவர்களுக்கு வேண்டிய நற்பயிற்சியை நாம் அளிக்க வேண்டும். ஊண் உடை எவ்வளவு அவசியமோ அதனிலும்மேலாக வேத அறிவும், ஸ்திரமான விசுவாசமும் வேண்டும். அறிவு குறைந்தவர்களே ஆபத்தில் அகப்படுகின்றனர் என்பது ஆன்றோர் அனுபவம். வேத அறிவும், வேத அனுசாரமும், வேத அபிமானமும் எமது பிள்ளைகளில் வேரூன்றுவிடின், அவர்களையிட்டு ஒரு காலம்நாமே வெட்கப்பட வேண்டியும்நேரிடும்.

கத்தோலிக்க சமயத்தின் மகத்துவத்தைப்பற்றி எமது பிள்ளைகள் கற்கவேண்டும். அதையிட்டு அவர்கள் நியாயமான முறையில் பெருமை அடைதலும்வேண்டும். எமது இரட்சா பெருமானின் தெய்வீகத்தைத் தூலாம்பரமாக அவர்கள் விளங்கவேண்டும். இத் தெய்வீகத்திற்குச் சாட்சியாகச் சிரத்தண்டனைவரினும் கலங்காது துணிதல் வேண்டும்.

பிள்ளைகளின் நடமாட்டத்தை, அவர்களின் சமுதாய வாழ்வை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும். காதலில் சாவதானமாகச் சிந்திக்கவேண்டும். கண்காணிப்பில்லாத பிள்ளை கட்டுக்கடங்க மாட்டான் என்னும் உண்மையைப் பெற்றோர் மனதிருத்த வேண்டும்.

எகிப்துநாட்டில் பஞ்சம் பரவிய போது அந்நாட்டு மன்னன் கலங்கினன். தேடிவந்தவர்களைப் பார்த்து:''சூசையிடம்போங்கள்'' என்று தேற்றினன். அவ்வாறாகவே பரிசுத்ததந்தை ஒன்பதாம் பத்திநாதர் கலக்கங் கொள்ளும் கத்தோலிக்கரை '' அஞ்சவேண்டாம் தஞ்சம்உண்டு'' என்று தேற்றினர். அர்ச், சூசையப்பரின் தளம்பாத பராமரிப்பில் திருச்சபையும் தழைத்தோங்கி வளருகின்றது.

வாழ்க்கைத் துறையில் உள்ள ஒவ்வொருவருக்கும் சூசையப்பர் விசேட பாதுகாவலராகி அபயங் கொடுக்கின்றார். பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையில்உள்ள தொடர்பு, அர்ச். சூசையப்பருக்கும், தேவ சுதனுக்கும் இடையில் உண்டு. கணவனுக்கும், மனைவிக்கும் இடையில் உள்ள அன்பு வாழ்க்கை மாமுனிக்கும், மாமரிக்கும் இடையில் உண்டு. விரத்தராக இருப்போர் விரத்தன்சூசையில் தமக்கு ஒருசிறந்த முன்மாதிரிகையைக் காண்பர். பிரபுக்கள் தாவீதன் கோத்திரத்துப் புத்திரனிலிருந்து வறுமையிலும் எப்படிச் செம்மையாய் வாழலாம் என்று கற்றுக் கொள்வர்.

சூசைமாமுனிவரோ திருக்குடும்பத்தின் தலைவர், தேவதாயின் துணைவர், தேவமைந்தனின் கைத்தாதை. தலைவனுக்குரிய பொறுப்பும், துணைவனுக்குரிய தியாகமும், தந்தைக்குரிய துயரமும் சூசையப்பரை விட்டு என்றும் அகன்றதில்லை. எனினும் அவர் பொறுப்பைக்கண்டு பயப்படவில்லை. தியாகத்தைக் கண்டு தயங்கியதில்லை. துயரத்தைக் கண்டு துடித்ததில்லை. தச்சுத் தொழிலைச் செய்யும் போதும், தனயனுடன் விளையாடும் போதும் தேவ திருவுளத்தையே கருத்திற்கொண்டார். வேலையும் விளையாட்டும், செபமும் தபமும் சூசைமாமுனிக்கு ஒன்றுதான்.

— L. P.


**TUITION**
IN
SHORTHAND-TYPEWRITING

Students (either sex) prepared for Pitmans London, London Chamb. of Comm. and other Examinations.

Students already trained are in Govt. Service, Firms, Schools and other Institutions.

*SHORTHAND SPEED TRAINING*
*A SPECIALITY*

JOSEPH ANDREW
"Mazenod House"
4th Cross St., Jaffna.



**விற்பனைக்கு**

முத்திப்பேறுபெற்ற
மாட்டின் தே போரஸ்
சரித்திரச் சுருக்கமும்
நவநாள் மன்றாட்டும் அடங்கியது.
முத்தர் மாட்டினில்
பத்திகொள்ளும் உத்தமர்க்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்

— **விலை பிரதி சதம் 10** —

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு.

தேவையானோர்:

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதவும்.




## கத்தோலிக்க தொழிலாளர் சமாகமம்

### வைகாசி 1-ந்திகதி

தொழிலாளரின் பாதுகாவலரான
அர்ச். சூசையப்பரின்
திருச்சுருப சுற்றுப்பிரகாரம்

**சுற்றுப்பிரகாரப்பாதை:**

திருச்சுரூபம், பாஷையூர் அர்ச். அந்தோனியார் கோவிலிலிருந்து புறப்பட்டு,

கடற்கரைவீதி
3-ம்குறுக்குத்தெரு (பாஷையூர்)
ஈச்சமோட்டை ஒழுங்கை
ஈச்சமோட்டைவீதி
ஓல்ட்பாக்வீதி
குருசோவீதி
அச்சகவீதி
பெரியதெரு
ரெம்பிள்வீதி
ஆஸ்பத்திரிவீதி
3-ம்குறுக்குத்தெரு
4-ம்குறுக்குத்தெரு
கடற்கரைவீதிவழியாகக்கடலணை மைதானம் வந்துசேரும்.

**குறிப்பு:**
பாதை ஓரங்கள் மாத்திரம் சோடிக்கப்படவேண்டும்.

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| காலை | 7-00மணி: | திவ்வியபூசை (ஆசனக்கோவில்) |
| | 9-00மணி: | சம்பாஷணைகள் |
| | 10-30மணி: | திருமணித்தியாலம் |
| | 11-30மணி: | செபமாலை |
| மாலை | 2-00மணி: | சம்பாஷணைகள் |
| | 4-30மணி: | சுற்றுப்பிரகார ஆரம்பம் |
| | 7-00மணி: | திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் |

எஸ். எம். வில்லி,
காரியதரிசி.

# சுதேச வர்த்தமானம்

## அப்போதிக்கரிமாரின் அத்தாட்சிப் பத்திரம்

அரசாங்கத்தில் கடமையாற்றும் அப்போதிக்கரிமார் வருங்காலத்தில் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் அளிக்கும்உரிமையைப் பெற்றுக்கொள்வர். சுகாதார சேவைத்தலைவர் வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையொன்றில், இவ்வதிகாரத்தை அவர்களுக்குக்கொடுக்க முடிவுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## தென்னை பயிர்செய்யக் காணி

புதுக்குடியிருப்பிலே தென்னைகள் பயிர்செய்வதற்கான காணித்துண்டுகள் விவசாயிகளின் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் பங்கீடுசெய்து கொடுக்கப்படவிருக்கின்றன. சுமார் 600 குடும்பங்களுக்குத் தனித்தனியே ஐந்தேக்கர்வீதம் காணித்துண்டுகள் வழங்கப்படும். இதற்குரிய காணிக்கச்சேரியை நடத்திப் பங்கீடுசெய்வதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாண அரசாங்க உதவிஅதிபர் எடுத்துவருகின்றார்.

## தமிழும் அரசாங்கஉழியரும்

தமிழைப் போதனமொழியாகக் கொண்டு அரசாங்கஉத்தியோகசேவையில் சேர்ந்திருக்கும் தமிழ்ஊழியர்களுக்கு இருப்பதற்குத்தானும் ஆசனங்கள் வழங்கப்படவில்லை; வேலைகள் தானும் சரிவரவழங்கப்படுகிறதில்லை; காலையில் உத்தியோக காரியாலயஞ்சென்று மாலையில் வீடுதிரும்புவதே இவர்களின்தொழிலாய் இருக்கிறது; வேலைகொடுபடாதிருக்கும் இந்தஉத்தியோகஸ்தர்களை வடக்கு–கிழக்குமாகாணங்களுக்கு அனுப்பிவைத்தால் என்ன? அந்தப்பகுதிகளில் அவர்களுக்குப் போதியளவு வேலைஉண்டல்லவா? என்று கோப்பாய் எம். பி. திரு. சி. வன்னியசிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் சென்றபுதன்கிழமை கேட்டகேள்விக்கு நிதிமந்திரி பதிலளிக்கையில், தமிழைப் போதனமொழியாகக்கொண்டு அரசாங்க உத்தியோக சேவையில் சேர்ந்திருப்பவர்கள் தமிழிலே வேலைகள்அதிகமாகவுள்ள கல்விப்பகுதிக்கும், தபால்தாபனபகுதிகளுக்கும் அனுப்பிவைக்கப்படவிருப்பதாகவும், வேலைசெய்யமுடியாத அரசாங்க பகுதியிலுள்ளஇவர்கள் இடமாற்றஞ்செய்யப்படவிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

## கூட்டுறவுவங்கி மசோதா

அரசாங்க பாராளுமன்றகட்சி அங்கத்தவர்களிடையே பெரும்பரபரப்புக்கும், நெருக்கடிக்கும் ஏதுவாயிருந்த கூட்டுறவு வங்கி மசோதாப்பிரச்சினையும் ஒருவாறு சமாளிக்கப்பட்டுவிட்டது. அந்தமசோதாவுக்குத் தானே சிலதிருத்தங்கள் கொண்டுவரப்போவதாகவும், அதனைஎதிர்த்தும், ஆதரித்தும்நிற்கின்ற இருசாராரையும் சமரசப்படுத்தும்வகையில் தானே முழுப்பொறுப்பையும் ஏற்கப்போவதாகவும் பிரதமர் பண்டாரநாயகா தெரிவித்ததையாலே அவர்களிடையே ஏற்பட்ட குழுறல்களும், கொந்தளிப்புகளும் ஓரளவில் தற்போது அமர்ந்திருக்கின்றன. அவ்வேளை அவர்பேசியபோது: "ஒருவரையொருவர் தாக்கிப்பேசுவதையும், கடிதமெழுதுவதையும்நிறுத்தவேண்டும்; இனிமேல்நான் பொறுத்திருக்கமாட்டேன்; இந்தவிதியை மீறுபவர்கள் எவராயிருந்தாலும் நான்கடின நடவடிக்கை எடுப்பேன்; எதிர்காலத்தில் நான்கண்டிப்பாக நடந்துகொள்ளப்போகிறேன்; எவராவது கட்சியின் அமைதிவிதிகளை மீறிநடந்தால் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாவார்கள்; பிளவுபட்ட வீடு இடிந்துவிழுவது நிச்சயம்; இத்தகைய புத்திமதியைக்கூற இனிஒருசந்தர்ப்பமும் எழக்கூடா"தென முழக்கலாயினர்.

## புதியசெனற்றர் நியமனம்

இலங்கையின் பிரபலசமூக சேவையாளருள் ஒருவரான லேடிஎவலின் டிசொய்சா செனற்சபையில் காலியாக இருந்த ஸ்தானத்துக்கு எம். ஈ. பி. கட்சியினல் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். இவர் 1912-ம்ஆண்டுமுதல் சமூக சேவையில் ஈடுபட்டுவருகின்றார். அவரின்சிறந்த சமூகசேவைக்காக அலிஸ் கொத்தலாவல தங்கப்பதக்கமும், ஓ. பி. ஈ. மகிமைப்பட்டமும் சன்மானிக்கப்பெற்றிருக்கிறார்.

## திரிகோணமலைத் துறைமுகம்

திரிகோணமலைத் துறைமுகத்தில் தற்போது 'அப்றே'என்ற பிரான்சிய கப்பலிலிருந்து வாழைச்சேனையிலுள்ள அரசாங்க காகிதத்தொழிற்சாலைக்கென்று 800 தொன்கூழ் இறக்குமதிசெய்யப்படுகிறது. தேயிலைஏற்றுமதியாளர்கள் இத்துறைமுகவேலைகள்பற்றித் திருப்தி தெரிவித் திருக்கிறார்கள். அடுத்த வைகாசிமாதத்திலே திரிகோணமலைத் துறைமுகத்துக்குப் பன்னிரு கப்பல்கள் அனுப்பப்படவிருக்கின்றன.

## 9தொகுதிகளும் 14 ஸ்தானங்களும்

இலங்கைச் சோனகர்களுக்கென்று சிங்களப்பகுதிகளிலே ஒன்பதுதொகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும், பொதுவிலே இலங்கைச் சோனகர்களுக்கென்று புதியசனப்பிரதிநிதிகள்சபையில் 14ஸ்தானங்கள் கொடுபடவேண்டுமென்றும், மத்தியமாகாணத்தில்மாத்திரம் நான்குதொகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும், கிழக்குமாகாணத்தில் பத்துத்தொகுதிகள் வேண்டுமென்றும், இவற்றில் சோனகருக்கு ஐந்தும், தமிழருக்கு ஐந்தும் இருக்கவேண்டுமென்றும் சோனகர்சங்க ஆதுக்கோஷ்டி ஒன்று தொகுதிநிர்ணயக் கமிஷன்முன் சாட்சியம்அளித்தபோது தெரிவித்துள்ளது.

## பொலிஸ் இன்ஸ்பெக்றர் ஜெனறல்

புதிய பொலிஸ்இன்ஸ்பெக்றர் ஜெனறலாக நியமனஞ்செய்யப்பெற்ற திரு. எம். டபிள்யு. எவ். அபயக்கோன் சென்ற திங்கட்கிழமைகாலை தமதுபதவியைக் கையேற்றார். அன்றுதினம் அவர்பேசியபோது: பொலிஸ்படையிலே அடிப்படைமாற்றங்கள் எதையுஞ்செய்யத் தனக்கு உத்தேசமில்லையென்றும், அரசாங்கபகுதித் தலைவர்கள் மாறிக்கொண்டிருக்கலாம், ஆனால், அதன் நிர்வாகம் தடையின்றி நடைபெறுமென்றும், பொலிஸ்பகுதியை உடனடியாக மாற்றியமைக்கத் தான் மந்திரவாதி அல்லவென்றும், இந்த நாட்டில் ஐந்துவருடகாலம் சமாதானம் நிலைத்திருந்தால் நாடுசுபிட்சமடைந்துவிடுமென்றும் அவர்கூறலாயினர்.

## பட்டினசபையும்காரியதரிசியும்

மன்னார்ப் பட்டினசபையின் காரியதரிசியாகக் கடந்தஇருவருடங்களுக்கு மேல் கடமைபார்த்துவருகின்ற ஓர் தமிழரைக் கொழும்புக்குமாற்றிவிட்டு அவரிடமாகத் தமிழேதெரியாத சிங்களவர்ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முற்றிலும் தமிழ் அங்கத்தவர்களைக்கொண்ட மன்னார்ப் பட்டினசபைக்குத் தமிழ்தெரியாதசிங்களவர் நியமிக்கப்படுவதால் சபைக்கூட்ட நிகழ்ச்சிகளை அவரால்புரிந்துகொள்ளமுடியாது; மன்னார்ப்பட்டினசபை தமிழிலேயே சகலவேலைகளையும் நடத்துவதால் தமிழ்தெரிந்தஒருவரே காரியதரிசியாக நியமனஞ்செய்யப்படவேண்டுமென்ற நியாயங்களை எடுத்துக்காட்டி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எம். ஈ. பி. ஆட்சியில் எல்லாம் விநோதமாகத்தான் இருக்கிறது.

# எங்கே சொர்க்கம், எங்கே சுவர்க்கம் என்றுகேளு

— டபிளெஸ் —

1911-ம்ஆண்டு சீனவிலே சன்யாற்-சென் தலைமையில் ஓர்புரட்சி! அதன் பயனாக 1949-ம்ஆண்டு நாட்டையே கைப்பற்றினர் கம்யூனிஸ்த தோழர்கள். போர்மோஸா தீவுமட்டுமே ஷியாங்கை ஷேக்கிற்குமிஞ்சியது.

சர்வகலாசாலைப்பட்டதாரியும், எழுத்தாளருமான தோழர் மாஸேதுங்கே மக்கள்சீனவின் தனிப்பெரும் தலைவரானார். அவரது கைங்கரியத்தால் எடுத்த எடுப்பிலேயே கட்சியின்எதிரிகள் 20 லட்சம்பேர் களையெடுக்கப் பட்டனர். இது அன்றுநடந்தது! ஆனால் ...... இன்று? ? ......

ஜனநாயகதத்துவத்தை ஏட்டிலே, நாட்டுஅரசியலிலே, மக்கள்வாழ்க்கையிலே நடாத்திக் காண்பிக்கிறேன்என வெளிஉலகிற்கு விளம்பரம் செய்து கொண்டிருக்கிறது கம்யூனிஸ்தசீன!

உணவுஉற்பத்தியிலே, விவசாயப் பண்ணைக் கூட்டுறவுமுறையிலே, அன்றுட பொருளாதாரத் துறையிலே இன்று தனிப்பெரும்நாடாக விளங்குவதாகப் பெருமையடித்துக் கொள்கிறது கம்யூனிஸ்தசீன!

மக்கள்ஜனநாயகம், மக்கள் ஆட்சி என்றபோர்வையிலே உலகமக்களுக்குப் பிரசாரஞ்செய்துகொண்டே மூங்கிற்திரைபோட்டு மறைத்து, மக்களை மாக்களாக ஆக்கிவரும் மக்கள்சீன இன்று உண்மையிலேயே அரசியல்பொம்மலாட்டம் ஆடுகிறது. தனிமனிதனுக்கோ, குடும்பத்துக்கோ, சொத்துகளுக்கோ உரிமையில்லை. அங்குஎல்லாம் கூட்டுக்கம்பெனி முறையிலேயே செயலாற்ற வேண்டுமென்ற அதிகாரபயங்கர நிர்ப்பந்தம் இருந்துவருகிறது. "மக்கள்சீனவைப் பார்! அங்கே பாலும், தேனும் வழிந்தோடுகிறது! பொன்னும், மணியும் தானகவேவிளைகிறது!" என்று மேடைகளிலபேசும்–அறிக்கைகள்விடும்– ஏட்டிலே வடித்தெடுக்கும் நம்நாட்டு ரூஷிய'மொடல்'கள்கூட இன்று சீனவில்நடக்கும் அடக்குமுறைத் தர்பார்களைக்கண்டு கதிகலங்குகிறார்கள். உண்மையிலேயே சீனவில் மக்கள்சுபிட்சமாக வாழ்கிறார்களா? சுதந்தரமாக நடமாடுகிறார்களா? என்பதை இன்றுஓரளவுக்கு மக்கள்புரிந்துகொண்டிருக்கிறார்கள். அந்தஅளவுக்கு அங்கே காட்டுமிராண்டித்தனமான ஆட்சிநடைபெறுகிறது.

அப்படிஎன்ன அங்கேநடக்கிறது? மக்கள்ஆட்சியாம், மக்கள்ஜனநாயகமாம், எல்லாம் வெறும்பித்தலாட்டம். ஆடம்பரமற்ற எளியவாழ்க்கையை மேற்கொண்டு பாட்டாளிமக்களின் பொல்லாததுயரைப் போக்குவதாக உலகம்அறியப் பகட்டுவிளம்பரம் செய்யும் சீன அதிகாரவர்க்கத்தினர் தங்களுக்கென்று தனிக்கார், அழகுபோல அரண்மனை, கோடைகாலத் தங்கும் இல்லம், எடுபிடிஆட்கள் ஏராளமாக வைத்துத் தாராளமாக வாழ்வுநடத்துகின்றனர்

ஆண்டவனை வழிபடுகின்ற ஆலயங்கள், அந்தஆலயங்களிலே மறைப்பணியாற்றும் திருப்பணியாளர்களின் இல்லங்கள், தர்மதாபனங்கள் அத்தனையையும் அரசினர் பறிமுதல்செய்து அவைகளையெல்லாம் அரசினரின் பகிரங்கமேடைகளாக, கேளிக்கைச்சாலைகளாக ஆக்கிவருகின்றனர்.

சீனவிலுள்ள கம்யூனிஸ்தகட்சி தனது அதிகாரத்தை உளவுத்துறை மூலமும், கடற்படை, தரைப்படைமூலமும் நிலைநாட்டிவருவது உலகம்அறிந்த உண்மை. அங்கு கட்சியைப்பற்றிக் குறைகூற எவருக்குமே உரிமையில்லை. மீறுவோருக்குக் கிடைக்கும்பரிசு நாடுகடத்தல் அல்லது மரணதண்டனை. அங்கேவெளியிடப்படும் நூல்கள், தினத்தாள்கள், திரைப்படங்கள் எல்லாமே கட்சியைப் பாராட்டிப்பேசவேண்டும், அதிகாரிகளிடம் தணிக்கைசெய்யப்பட்டிருக்கவேண்டும். வெளிஉலகத்தோடு தொடர்புகொள்ளும் வானொலி நிலையங்களெல்லாம் அரசினரின் மேற்பார்வையிலேயே இயங்கவேண்டும்.

மக்களின் மனதைமயக்கித் தங்களது கட்சிக்கொள்கைகளை அவர்களிடம் துப்பாக்கிமுனையைக்காட்டி அச்சுறுத்திப் புகுத்துகிறார்கள். அவர்களைக்கொண்டேசீனவில பாலுந்தேனும் வழிந்தோடுகிறதென உலகத்திற்குப் பறைசாற்றச் செய்கின்றனர். சீனவிலே மூளைகழுவும்வேலை முழுஅளவிலே நடைபெற்றுவருவதை யாருமமறுக்கவோ, மறைக்கவோமுடியாது. மறக்கத்தான் எவ்வாறுமுடியும்?

"நாட்டுத்திருச்சபை" என்றபெயரால் நவசீன இன்று ஒருபுதுவழி கண்டுபிடித்திருக்கிறது. அர்ச்சியஷ்டனரிகளையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டுச் சீனக்குருமாரை ரோமைத்தொடர்பினின்றும் பிரிக்கமுயலுகிறது, அச்சுறுத்துகிறது. மீறுவோரெல்லாம் சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

அண்மையில் கூட மங்கோலியாவில் பத்துக்கத்தோலிக்கரையும், மூன்று புரொட்டஸ்தாந்தரையும் சிவப்புச்சீன அதிகாரிகள் வீண்பழிசுமத்திக் கைதுசெய்து காவலில்வைத்திருக்கிறார்கள். லீசுங்-சிக்குவ்வாங் இருவருக்கும் முறையே 20, 15வருடச் சிறைத்தண்டனை அளித்திருக்கிறார்கள். சீனக்கன்னியரான மரிஹுசி ஹோசகோதரிக்கு 3வருடக் கடினஉழைப்புத் தண்டனை வழங்கியிருக்கிறார்கள்.

சீனவிலேநடைபெறும் விவசாயக் கூட்டுறவுப் பண்ணைமுறையிலும் இதே நிர்ப்பந்தந்தான். மக்களை அச்சுறுத்திக் கட்டாயவேலை வாங்குகின்றனர். உழைத்துழைத்து ஊதியத்தை அரசாங்கத்திற்குத் தானமிடுவதைத்தவிர அவர்களுக்குக் கதியேது? சீனவின் விவசாயகூட்டுறவுப் பண்ணைமுறையின் வெற்றி தோல்வியெல்லாம் எவருக்குமேபுரியாத புதிராகஇருக்கிறது.

கம்யூனிஸ்த சீனசென்றுதிரும்பிய மேனாட்டுமேதை திரு. எட்வர்ட் ஹண்றர் தாம்சீனவில் நேரில்கண்டறிந்த உண்மைகளை ஒளிவுமறைவின்றித் தாமஎழுதியஏடான "செஞ்சீனவிலே மூளைகழுவுதல்" (Brain Washing in Red China) என்றபுத்தகத்திலே வடித்தெடுத்திருக்கிறார். அவ்வரைப் பின்பற்றி நம்தாயகத்திலிருந்து சீன சென்று பார்வையிட்டுவந்த திருவாளர்கள் K. G. மேனன், I. C.S., P. N. ரூய், டக்றர் சந்திரசேகர், பிரபல பம்பாய் டைம்ஸ் ஆவ் இந்தியா பத்திரிகை ஆசிரியர் பிராங் மொறயஸ், திருமதி விஜயலட்சுமி பண்டிட்போன்றவர்கள் சீனபற்றிக் கூறுபவைகளெல்லாம் நாட்டுநலம்பேணும் அத்தனைபேருக்கும் ஓர்அறைகூவல், கட்சிஅனுதாபிகளுக்கு ஒருசவுக்கடி.

நாஸ்திகவெறிபிடித்துக் கடவுள் இல்லை, மதம்இல்லையென்று தறுதலையாகப் பேசித்திரிந்துபதவிமோகத்தால் மக்களைச் சுரண்டிவாழும் கூட்டத்தினரின் கம்யூனிஸம் என்றபெயரிலே புதியவழிகாட்டுகிறோம், வாருங்கள்மக்களே என அழைத்துப் புதர்களில்தள்ளி எக்காளமிடும் எத்தர்களின் ஆட்சி சீனவிலே தலைவிரித்தாடுகிறது. பாமரமக்கள் அதிகாரசூழ்ச்சிக்குப் பலியாகி அந்தப் பாதாளத்திலே அடைபட்டுக் கிடக்கின்றனர், அவதிப்படுகின்றனர்.

சீனவிலுள்ள நிலக்கிழார்களும், செல்வந்தர்களும் எப்படியும்மக்களை மண்ணோடுமண்ணாக்கி அந்த மண்ணிலே ஒய்யாரநடைபோட விழைகின்றனர். தங்கள்நாட்டின் விதிமுறைகளைத் தாங்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# அர்ச். சூசையப்பரின் சிறியநாய் அந்திரே பிறதர்

[இஃது சஞ்சூசையப்பர்சபைச் சந்நியாசர்களில் ஒருவராயிருந்து காலஞ்சென்ற சங். பி. இஞ்ஞாசிமுத்து, S. S. J. பிறதர்அவர்களால் தமிழாக்கஞ் செய்யப்பெற்றது.]

(தொடர்ச்சி)

இத்தன்மையாய் ஆச்சரியகரமான ஆரோக்கியங்கள் எத்தனையோ நூறுநூருக அருளப்பட்டுவந்தாலும் சிலருக்கு அவற்றைக் கண்ணாரக்காணும் பாக்கியங்கிட்டாது போவதுமுண்டு. ஒருஸ்திரீ தான் நேரே ஓர்விசேஷமான அற்புத ஆரோக்கியத்தைக் காணவேண்டுமென்றுவிரும்பிப் பிறதருடைய கருமசாலைக்குவந்தாள். பிறதர் அவளைப் பார்த்து: "நீ வீண்விநோதப்பிரியினுலே தூண்டப்பட்டு வந்திருக்கிருய்; சருவேசுரனுடைய வல்லமையிலே உனக்குத் தகுதியான விசுவாசமில்லை; ஆதலினுலே நீ ஒரு புதுமையுங் கண்டுகொள்ளமாட்டாய்" என்று தெள்ளத்தெளியச் சொல்லிவிட்டார். அவளோ அடுத்தடுத்து எட்டுநாளாயிருந்துபார்த்தும் தன்ஆசை பூர்த்தியாகாமையால் அலுத்துச்சலித்து வீட்டுக்குத் திரும்பிவிட்டாள். அடுத்த ஒன்பதாம்நாளிலே திமிர்வாதத்தினுல் பெரிதும் பாதிக்கப்பட்டு வருந்திய ஒருவன் திடீரெனக் குணப்படலாயினுன்.

பிறதரிடம் வந்தவரெல்லோரும் புதுமையாகச் சொஸ்தம்அடைந்துகொண்டதுமில்லை. அதற்குக்காரணம் பிறதர்வாக்கினுலேயே வெளிவரலாயிற்று. "தேவதிருவுளத்துக்குப்பணிவும், வேண்டியவிசுவாசமும் இல்லாமையினுலேயே அநேகபிணியாளர் ஆரோக்கியம் அடையாது போகின்றூர்கள். நான்செய்யும்படி ஏவுவதை ஏவும்பிரகாரஞ் செய்வதுமில்லை. சூசையப்பர் பதக்கத்தினுலே உரசுவதும், அவருடைய தைலத்தைப்பூசித் தேய்த்துவிடுவதும் போதுமா? அதை விசுவாசத்தோடுஞ்செய்யவேண்டுமே. சூசையப்பரை மன்றாடவேண்டுமென்பது மெய்யே. ஆனுல், சகலத்திலும் தேவனுக்குச் சித்தமானதே நமக்கும் மனதாயிருக்கவேண்டுமே" என்று சொல்லியுள்ளார்.

விடுதிச்சாலை நடத்திவந்த ஓர் ஸ்திரீ விடுதிவிட்டுவந்த பிள்ளைகள் சமஸ்தருமே தன்னைவிட்டு அகன்றுபோனுர்கள் என்று கண்டுகலங்கி, இதென்னமாயம்! என்று மனங்கவன்று வருந்திக்கொண்டிருக்கையில், அவள் சிநேகிதிஒருத்தி அந்ரேபிறதருடைய மன்றூட்டுதவியைக் கேட்கும்படி புத்திஏவினுள். ஆயின், அவளுடைய இருதயத்திலே அவரைப்பற்றி அவமதிப்பான உணர்ச்சியும், சிந்தனையுங் குடிகொண்டிருந்தமையால், அவரிடம் போகச் சுபாவிகமாய் வெறுப்பாயிருந்தபோதிலும் வந்துவிடிந்த மோசம்நீங்க வேறெந்த உபாயமுந் தென்படாமையால், புறப்பட்டுப் போய் அவர் சகாயத்தை இரந்தாள். அவர் அவளை நோக்கி: "சஞ்சூசையப்பர் செபக்கூடத்தைக் குறித்தும், என்னைக்குறித்துஞ் சன்னையாகப் பேசி நகைப்பதை விட்டுவிடுவாயாகில், விட்டுநீங்கிய விடுதிச்சாலைப் பிள்ளைகள் மீண்டும் வந்துசேரக் காண்பாய்" என்றூர். தமதுகருமசாலையிலே ஒரு அன்னியன் வந்துநிற்கக்கண்டு, "அந்தமனிதனுடைய மன்றூட்டு அருளப்படமாட்டாது. ஏனெனில், அவன் உள்ளக்கருத்து நல்லகருத்தல்ல" என்றூர். வரும் நோயாளிகளுள்ளே தேவஇஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருப்பாரையும், இராதாரையும்பகுத்துணர்ந்து இராதாரை நவநாட்செபம் செய்யும்படி ஏவும்போது, முதற்பாவசங்கீர்த்தனம் பண்ணிக்கொள்ளும்படி பரிவாகக் கற்பிப்பார். வெகுதூரத்தில் நின்றுவந்த ஓர்குருடன் பிறதரை இருமுறை தரிசித்து இரந்து வேண்டியவிடத்தும் கண்வெளிக்கும் அருளை அவன்அடைந்துகொண்டானில்லை. பிறதருடைய மித்திரருள் ஒருவர், அவனுடைய அழுகைப்பிரலாபத்தினுல் மனம்நெகிழ்ந்து, பிறதரைஅணுகி, "குருடனைக் குணப்படுத்தாமலே அனுப்பிவிடப் போகின்றீரோ?" என்றுவினுவ, அவர்விடையாக: "அவன் ஒன்பதாம்கற்பனைக்குமாறுன தீயவழக்கத்தை ஒழித்துவிடும்வரையும் அவன்குருடு குணப்படவேமாட்டா"தென்றூர். இவையும், இவைபோன்றவையுமான சம்பவங்கள் காரணமாய், பிறருடைய இருதய அந்தரங்கத்தை—ஆத்துமநிலைபரத்தை அறிந்துகொள்ளும் அருட்சக்தி அவருக்கு அருளப்பட்டுவந்ததாகவும் அனுமானித்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

சரீரநோயாளரைக் குணப்படுத்துவதைக்காட்டிலும், பாவிகளாகிய ஆத்துமநோயாளரைக் குணப்படுத்துவதையே அதிகனமாகமதித்து, அது விஷயத்திலேயே அவர் விசேஷ கண்ணுங் கருத்துமாயிருந்துவந்தார். பிறர்ஈடேற்றவாஞ்சை மிகுந்த நம் அருமைத்துறவி தம்மோடுசிநேக சகவாசஞ்செய்துவந்த விசுவாசிகள் தம்மிடம் பாவிகளை அழைத்துவரும்படி அவர்களை ஆவலித்துக்கேட்டுக்கொள்வார். பாவிகளை மனந்திருப்பித் தேவனேடு சமாதானமாய் வாழச்செய்வதே தமக்குப்பேரானந்தம்என்று சொல்லுவார். தம்மிடம் வருங் கடினமனப் பாபிஷ்டருக்குத் தேவனுடைய கோணுத நீதியையும், காத்திராப்பிரகாரம் நேரும் சிவஅபாய விபத்துக்களையும், அசுப்பிலேவரும் அவலமரணத்தையுங் குறித்து வலியுறுத்திப்பேசி அவர்களிடம் தேவபயத்தை எழுப்பிவிடுவார். அறையுண்டநாதர் சுரூபத்தைக் கரத்தேந்திக்காண்பித்து, அவர்பட்டபாடுகளைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும், உருக்கமாகவும் எடுத்துக்கூறி, ஊதாரிப்பிள்ளையின் உவமையை விளக்கிக்காண்பித்துச் சர்வேசுரனுடைய அளவில்லா இரக்கத்திலே நம்பிக்கையையும், கட்டிக்கொண்ட அக்கிரமங்களுக்காக உத்தமமனஸ்தாபத்தையும்எழுப்பி அவர்கள் உள்ளுடைந்து கண்ணீர்சொரியச்செய்வார்.

பாவிகளுக்குப் புத்திபுகட்டுவதோடு திருப்திப்படாது அவர்களுடைய ஈடேற்றத்துக்காகப் பத்தி வைராக்கியத்தோடும், பத்திவேகத்தோடும் செபமும் ஒப்புக்கொடுத்துவருவார். அநுதினம் பார்க்கும் அலுவல்நிமித்தமாய் அவர் அன்னபானத்தை அலட்சியஞ்செய்யவும், அதிசிரேஷ்டர் அநுமதிபெற்று நேரஞ்சென்றபின்னரே இராக்காலத்தில் கண்ணுறங்கப்போகவும் நேரும். என்றூலும், செபத்துக்குரிய நேரத்தைக் குறைத்துவிட அவர்மனம் ஒருப்படாது. "நித்திரையைமுறித்து நெடுஞ்செபத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பதிலும், கொள்ளவேண்டிய நித்திரையைக்கொண்டு அவருக்கு ஒப்புக்கொடுப்பதேதாவிலை" என்று ஒரு குருவானவர் அவருக்குச்சொல்ல, "எங்கள் செபவேண்டுதல் ஆத்துமாக்களுக்கு எவ்வளவு அத்தியாவசியகம்என்று நன்குணர்ந்திருப்பீராகில், இவ்விதஞ் சொல்லமாட்டீரே" என்று பதிலுரைத்தார்.

(தொடரும்.)



போளவத்தை விசாரணைப்பங்கைச்சேர்ந்த மக்கள் அதிகம்சமீபத்திலே நாத்தாண்டியாவிலுள்ள தேவமாதாவின் திருசேத்திரத்துக்கு ஓர்யாத்திரை நடத்தினுர்கள். இந்தயாத்திரையை அதிவண. யு. கிளெமென்ற் பர்னுண்டோ சுவாமியவர்கள் தலைமைவகித்து நடத்தினுர். இதில் 500 பேருக்குமேல் கலந்துகொண்டார்கள். இந்த யாத்திரைக்கோஷ்டியை மேலேயுள்ள படத்திற்காண்க!

# புதிய பாப்பரசர் காலத்து முதல்இரு அர்ச்சியசிட்டர்கள்

அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திலே அன்றுஞாயிற்றுக்கிழமை அருளப்ப பாப்பரசர் தமது ஆளுகைகாலத்து முதல்இரு அர்ச்சியசிட்டவர்களைப் பிரகடனஞ்செய்யலாயினர். இத்தாலியரான ஓர்பிரான்சிஸ்கன் சபை பிறதாகிய முத். செலெயின் சாள்ஸும், முத். ஜுவக்கீன் மாஸுமே இரு புதிய அர்ச்சியசிட்டவர்களுமாவர். இவர்கள் சென்ற 1958-ம் ஆண்டு கார்த்திகை 23-ந் திகதியன்றே இத்திருப்பட்டம் அருளப்பட விருந்தார்கள், ஆனுல், 12-ம் பத்திநாத பாப்பானவர் காலஞ்சென்ற காரணமாகத் திருப்பட்டவைபவம் பின்போடப்படலாயிற்று.

## துறவறம்பூணவிருந்த இல்லறவாசிகள்

அர்ச். ஜுவக்கினு மாஸ்ஓர்ஸ்பானிய மாது. இவள் 1793-ஆண்டு பார்சலோனுநகர ஓர்இளம்நியாயவாதியான தியடோரே தே-மாஸ் என்பவரைத் திருமணஞ்செய்துகொண்டாள். அங்ஙனம மணஞ்செய்துகொண்டதும் தங்களுக்குப் பிறக்கும பிள்ளைகளைச் சீராக வளர்த்தபின் ஒருங்கே இருவரும் துறவறம் பூண்டுகொள்ளுவதெனத் தங்களுள் ஓர் பொருத்தம செய்துகொண்டார்கள். ஆனுல், எட்டுப் பிள்ளைகள் பிறந்ததும் 1816-ம் ஆண்டு கணவர்இறந்துபோகவே 33-ம்வயதில் இவள் ஓர்விதவையானுள். அதன்மேல் எஞ்சியிருந்த தனது ஆறுபிள்ளைகளைப் பராமரிப்பதிலும், செபத்திலும், தான் வசித்திருந்த விச்நகர் ஆஸ்பத்திரி நோயாளருக்கு உதவிசெய்வதிலும் தனதுவாழ்க்கையைச் செலவிட்டுவந்தாள். இவளும், இவள்நாயகரும் துறவறம் பூணவிருந்ததைப் பிந்த எஸ்டேபன் பழிறிக்காஸ் என்ற பரிசுத்த குருவானவர் அறியவந்து கூறியஆலோசனையின்பேரிலே பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கும், நோயாளரைப் பராமரிப்பதற்குமான ஓர்கன்னிகாசபையை அடியிட்டாள். பிறர்சிநேக கார்மேல் சபையென அறியப்படும் இக்கன்னிகாசபை காலகதியில்வளர்ந்து ஸ்பானிய தேசத்தின் பல்வேறுபகுதிகளிலும் பாடசாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும் ஸ்தாபிக்கலாயிற்று. இச்சபையின் சிரேஷ்ட தாயாராயிருந்த ஜுவக்கினு தாயார் 1851-ம்ஆண்டு பாரிசவாதம் கண்டு தனது சிரேஷ்டர் பதவியைக் கைவிட்டு ஓர்சாதாரண கன்னியாஸ்திரியாயினுள். பாரிசவாதம் அதிகம்கடுமையானதால் தனதுபுதல்விகளுள் ஒருவர் சிரேஷ்டதாயாராயிருந்த பார்சலோனுநகர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு 1854-ம்ஆண்டு தனது71-ம்வயதிலே பரமபதமடைந்தாள். இப்புண்ணியவதிக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுவதிலே 11-ம் பத்திநாத பாப்பானவர் கேடே கரிசனை எடுத்துவந்தார். பின்னர் 1940-ம் ஆண்டு 12-ம்பத்திநாதபாப்பானவரால் அத்திருப்பட்டம் அருளப்பெற்றுள்.

## பிரான்சிஸ்கன்சபையின் 49-வது அர்ச்சியசிட்டவர்

அர்ச். சாள்ஸ் ரோமைநகருக்குத் தெற்கேயுள்ள செலெநகரில் 1613-ம் ஆண்டுபிறந்தார். பாலியராயிருந்தபோது செம்மறியாடுகளை மேய்த்துவந்தார். அப்போது மேய்ச்சல்நிலங்களிலே மனித்தியாலக்கணக்காய்த் தங்கியிருக்கையில் அர்ச்சியசிட்டவர்களின் வாழ்க்கைவரலாறுகளைக் கருத்தாக வாசித்துவந்தார். இவர் ஓர் வறியகுடும்பத்தில் பிறந்தவர். 1636-ம் ஆண்டு பிரான்சிஸ்கன்சபைப் பிறதாயினுர். தனது சந்நியாசவாழ்க்கையிலே ஓர்சக்கிறிஸ்தானுய், சமையற்காரனுய், வாயில்காப்போனுய், தோட்டக்காரனுய்ப் பணியாற்றிய இவர் சங்கோபாங்க சிவியத்தைப்பற்றிய அருமையான பலநூல்களையும் எழுதியிருக்கின்றூர். 1656-ம்ஆண்டு பரந்தகொள்ளைநோயின்போது இவர்ஏழைகளுக்கு உணவும், உடைகளும் கொண்டுபோய் உதவியும், ஞானஆறுதல் உண்டுபண்ணியும்வந்தார். இறந்தவர்கள் மரியாதையான அடக்கம் பெறத்தக்கதாக அவர்களை ரோமைநகருக்கு வெளியிலுள்ள சேமக்காலைகளுக்குச் சுமந்துசென்றூர். ஓர்காலம் கடுங்கோபகுணமுள்ளவராயிருந்த இவர் அதனை அடக்கிப் பெரும்வெற்றியீட்டிச் சாந்தகுணத்துக்கு ஓர்மேல்வரிச்சட்டமாக விளங்கினுர். ஓர்முறை எழுந்தேற்றஞ் செய்யப்பட்ட திவ்வியநற்கருணையிலிருந்து வெளிகொண்ட ஒளிக்கதிர்ஒன்றினுல் இவருடைய இருதயம் ஊடுருவப்பட்டு உருமாறியதாகச் சொல்லப்படுகிறது. அங்ஙனம்உருமாறி நீண்டுபோன இவருடையஇருதயம் ரோமாபுரியிலே இன்னமுமபூச்சியமாகக் காப்பாற்றப்பட்டுவருகிறது. 1669-ம் ஆண்டு மார்கழி31-ந்திகதி இவர் கடினநோய்கண்டார். 9-ம் கிளெமென்ற் பாப்பானவர் இவரைச்சந்திக்கச் சென்றபோது, மூன்றுஇராசாக்கள் திருநாளன்று நாமஇருவரும் மோட்சத்தில் சந்தித்துக்கொள்ளுவோம்என்று சாள்ஸ் அவருக்குச்சொன்னூர். பின்னர்சிலதினங்களில் கிளெமென்ற் பாப்பானவர் காலஞ்சென்றூர். சாள்ஸ் தைமாதம் 6-ந்திகதியன்று மரணமடைந்தார். 1881-ம்ஆண்டு இவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படலாயிற்று. இவருடன் பிரான்சிஸ்கன்சபையில் தற்போது 49அர்ச்சியசிஷ்டவர்கள் இருக்கின்றூர்கள்.

# புனிதர்கள் வரிசை...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துப்பட அது அமைந்திருந்தது. "இது மிகவும் பொறுப்பான செயல் என்று பரிசுத்த தந்தை உணருகிருர். ஆதலால், ஒளிக்கும், ஞானத்துக்கும் ஊற்ருகிய திவ்விய இஸ்பிரீத்துச்சாந்துவின் உதவியை எல்லோரும் மன்ருடிக்கேட்க வேண்டும் என விரும்புகிருர்" என்று ஒநகருதிஞல் அறிவித்தார். விண்ணப்பம்விடுத்தோர் தங்கள் இடங்களிற்குச் சென்ருர்கள். பரிசுத்த தந்தை சிம்மாசனத்தைவிட்டு இறங்கிவந்து முழங்காலில் இருந்தார் தியாக்கோன் உதவிக்கருதிஞல் "ஒருத்தே" செபியுங்கள் என எல்லோரையும் வேண்டிக் கொண்டார். மனனச்செபம் முடிந்ததும், "லேவாத்தே" எழும்புங்கள் என இரண்டாவது உதவிக்கருதிஞல் தியாக்கோன் கூறிஞர். பரிசுத்ததந்தையும் மற்றவர்களுடன் எழுந்தார் இருமேற்றிராணிமார் புத்தகமும், மெழுகுதிரியும் கொண்டு வந்தனர். "வேனிக்கிறேயாத் தோர் ஸ்பி றித்தூஸ்"—'இஸ்பிரீத்துச்சாந்து வேவாரும்' என்ற கீதத்தின் முதல்வரியைப் பாடிஞர். அதைத் தொடர்ந்து இசைக்குழுவினரும், கூடியிருந்த மக்களும் பாடிஞர்கள். முதலாவது அடிமுடியுமட்டும்மாத்திரம் எல்லோரும் முழங்காலில் இருந்தார்கள்.

**சத்தியப்பிரகடனம்:**

திருச்சடங்கின் முக்கியகட்டம் நெருங்கிக்கொண்டு வந்தது. மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். மூச்சுவிடுவதே கடினமாயிருந்தது. அவ்வளவு பெருந்தொகை. ஆலயத்தின் எல்லாப்பக்கமும் சனங்கள்நிறகவில்லை. நடுக்கோவிலில்தான் குவைமந்துகுவைமந்து நின்ருர்கள். இன்னும் பீடத்திற்கு வலது புறத்திலும், இடதுகரையிலும்நின்ற சனக்கூட்டத்திற்குக் குறைவில்லை. மேலேநின்று பார்த்திருந்தால் அழகான ஒரு சிலுவைவடிவில், மக்கள்திரள் அமைந்திருப்பதைக் கண்டிருக்கலாம். திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் செபம் பாடிமுடிந்ததும், எல்லோரும் எழுந்தார்கள். பரிசுத்ததந்தை அரசுக்கதிரையில் அமர்ந்தார்: குருவாக மட்டுமல்ல, மேற்றிராணியாராக மட்டுமல்ல, கற்பிக்கும், தனிப்பெரும் ஆசிரியராக—அகில திருச்சபையினதும் அன்புத்தலைவராக அதிகாரத்துடன் வீற்றிருந்தார். பின்னர் தெளிவானகுரலில் பின்வருமாறு கூறிஞர். "பரிசுத்ததிரித்துவத்தின் புகழிற்காகவும், கத்தோலிக்கவிசுவாசத்தின் உயர்விற்காகவும், கிறீஸ்தவ சமயத்தின் செழிப்பிற்காகவும், எமது கர்த்தரான யேசுக்கிறீஸ்து நாதரினதும், பரிசுத்தஅப்போஸ்தலரான பேதுரு,பாவிலுவினதும், எம்முடையதும், ஆகிய அதிகாரத்தால், ஆழ்ந்த ஆராய்ச்சியின்பின் தேவஉதவியை எப்போதும் வேண்டி, எமது வணக்கத்துக்குரிய சகோதரர்களாகிய உரோமன் திருச்சபையின் கருதிஞல்களினதும், நித்தியநகரில் தற்போது சமுகமாயிருக்கும் பிதாப்பிதாக்கள், அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்களினதும் அறிவுரையாலும், முத்திப்பேறுபெற்ற சாள்ஸ் டாசெஸ்ஸே, முத். ஜோக்கீஞ என்பவர்களை அர்ச்சியசிட்டர்களாகப்புனிதர்களின் அட்டவணையில்எழுதி, அவர்களது ஞாபகம் ஒவ்வொருவருடமும் அகிலதிருச்சபையிலும் பத்தியுடன் கொண்டாடப்படுதல் வேண்டும்என்று நாம்வரையறுத்துக் கட்டளைபிறப்பிக்கிறோம்...... அவர்கள் மோட்சத்தில் நிச்சயமாக, சந்தேகத்திற்குஇடமின்றியே இருக்கிருர்கள்" எனக்கூறிவிட்டார், வழுவாவரமுத்திரையால், இந்த உண்மைபொறிக்கப்பட்டது.

விண்ணப்பித்தவர்கள் மற்றும்ஒருதடவைசென்று நிர்வாககருதிஞலின் பெயரால் பாப்பரசருக்கு நன்றிதெரிவித்தார்கள். நிர்வாககருதிஞல் சிம்மாசனத்தைஅடைந்து பாப்பரசரின் கைகளையும், கால்களையும் முத்தமிட்டபின் தம்முடையஇடத்திற்குச் சென்ருர். இன்னும்ஒருவர்எழுந்து, அர்ச்சியசிட்டபட்டத்தின் வாலாற்லறத் திருச்சபையின் அதிகாரநூல்களில் குறித்துவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

**இறைவனுக்கு நன்றி:**

பாப்பரசர்எழுந்து, "தெதேயும்" என்ற தேவதோத்திரகீதத்தைத் தொடங்கிஞர். இசைக்குழுவினரும், மக்களுமாகச்சேர்ந்து படித்தார்கள். அந்தநேரம் ஆலயமணிகள் "டாங், டாங்"என்று ஆர்ப்பரித்தன. அதைத் தொடர்ந்து, உரோமைமாநகரிலுள்ள ஆலயமணிகள்மூலம் இந்த நற்செய்தி பரவியது. கீதமுடிவில், "அர்ச். சாள்ஸ், அர்ச். ஜோக்கீஞ எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று தியாக்கோன் உதவிக்கருதிஞல்பாடிஞர். "யேசுக்கிறீஸ்துநாதரின் திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திராயிருக்க" என்று பாடகர்குழு பதில்அளித்தது. பரிசுத்த தந்தை, புதிதாகஇயற்றப்பட்ட செபத்தின்மூலம் பட்டம்பெற்றபுனிதர்களின் உதவியைவேண்டிஞர். "ஆமென்" என்ற எல்லோருடையவும்பதிலுடன் செபம்முடிந்தது.

**நல்வாழ்க்கை:**

பாப்பரசர் தம்முடையசிம்மாசனத்தில் அமர்ந்தார். குழுமியிருந்த மக்களுக்குப் புனிதர்களின்வாழ்க்கையை விளக்கிஞர். அவர்களை நாம் பின்பற்ற வேண்டும்; அவர்களின் புண்ணியங்களை நாமும் மேற்கொள்ளவேண்டும்; அவர்களுக்குஇருந்த அன்புமனம் எம்மிடமும் இருக்கவேண்டும்என்று எடுத்துக்கூறிஞர். அர்ச்.சாள்ஸ் இத்தாலியதேசத்தவர். 1613-இல் செஸ்லாநகரில் பிறந்தார். தேவதாயார் காட்சியளித்துக் கேட்டுக்கொண்டபடி 22-வதுவயதில் துறவிகள்மடத்தில் சேர்ந்தார். அநேகவருட பரீட்சைக்குப்பின் புனிதபிரான்சிஸ் சபையைச் சேர்ந்த துறவிகளுள்ஒருவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவரிலே அப்போஸ்தலிக்கஆர்வம், தாகம் அதிகமாகக் காணப்பட்டது. தியானம் அவர் வாழ்வில் முக்கிய இடம்பெற்றது. மனித உள்வாழ்வைப்பற்றி அநேக நூல்கள் எழுதியுள்ளார். நற்கருணைநாதரின் கூரியஒளியால் அவர்மார்பு தாக்கப்பட்டு ஒருபுண்உண்டாகியது. அநேகவருடங்களின்பின் இறைவனல் புதுமையாகக் குணமாக்கப்பட்டார். 1669-ம்ஆண்டு தைமாதம் மண்ணுலக வாழ்வைநீக்தார். அர்ச்.ஜோக்கீஞ உயர்ந்தகுடும்பத்தில் உதித்தவள். ஸ்பானியதேசத்தைச்சேர்ந்த பார்சலேஞநகரிலே 1763-இல்பிறந்தாள். சிறுவயதிலேயே தூயவாழ்க்கை வாழ்ந்தவள். 16வயதில் திருமணம் செய்தாள். மனைவிக்குரிய அன்பும், கடமையும், கண்ணியமும் அவளிடம் சிறந்துவிளங்கின. கணவன் இறந்தபின், மடத்திற்சேர்ந்து மற்றவர்களுக்குமுன்மாதிரியாக விளங்கிஞள். சிலவருடங்கள்சென்றதும் கார்மேல் (சிநேக) மடத்தை ஸ்தாபித்தாள். மென்மையானகுணம், இரக்கம்நிறைந்த உள்ளம். தியானத்தை விரும்பிய தூய மனம். எழுபத்திரண்டாவதுவயதில் இறைவனடிசேர்ந்தாள்.

அவர் இவ்வாறுபடித்துமுடிந்ததும் எல்லோரும் கரகோஷஞ்செய்தார்கள். மகிழ்ச்சிக்குறிப்பாகவும், வாக்குறுதிகொடுக்கும் தன்மையாகவும் தோன்றியது அது.

**ஆசீர் அளித்தல்:**

கருதிஞல்தியாக்கோன் சிம்மாசனத்திற்கு இடதுபுறத்தில்நின்று "காண்பெருப்பாவி" மந்திரத்தைஓதிஞர். "அப்போஸ்தலராய்இருக்கிற பேதுருஉடனேயும், பாவிலுஉடனேயும், அர்ச். சாள்ஸ்உடனேயும், அர்ச். ஜோக்கீஞஉடனேயும், சகலஅர்ச்சிய......பண்ணுகிறேன்." இவ்வாறு புதியஅர்ச்சியசிட்டர்களின் பெயர்கள் செபத்தின்இடையே சேர்க்கப்பட்டன. செபத்தின் இரண்டாம்பாகத்திலும் பேதுருபாவிலுவுக்கு அடுத்து, அவர்களுடையபெயர்கள் சேர்க்கப்பட்டன. அதற்கிடையில் உபதியாக்கோன் பாப்பரசர்சிலுவையுடன் சிம்மாசனத்திற்குவந்தார். 'பாவமன்னிப்பு'ச்செபம் பாப்பரசரால் பாடப்பட்டது. அதிலும் புதிதாகப்பட்டம் பெற்றவர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டன. முடிவில், தம்முடைய பரிபூரண ஆசீர்வாதத்தை அளித்தார் பாப்பரசர். இத்துடன் பட்டம்அளிக்கும் அழகானதிருச்சடங்கு முடிவடைந்தது. திவ்வியபூசைப்பலியீட்டும் தொடங்கவில்லை.

**பாப்பிறையின் பலிபூசை:**

பாப்பரசர் சிம்மாசனத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு, "ரேஸ்" என்ற திருச்சபைக்கட்டளைச்செபத்தை ஆரம்பித்தார். அவர் அணிந்திருந்த சப்பாத்துஅகற்றப்பட்டது. செருப்புவகையைச்சேர்ந்த இன்னுமொன்றை அணிந்தார். அவை பட்டாடையால் பின்னப்பட்டிருந்தன. பூவேலைப்பாடு அதிகம். அதில்வெள்ளிக்குருசொன்றும் காணப்பட்டது. செபமுடிவில் பூசைஉடுப்புக்களை அணிந்தார் சிம்மாசனத்தைவிட்டிறங்கிப் பலிபீடஞ்சென்ருர். படிகள்மேல் ஏறுமுன் ஆசிர்வதித்தபடியே பீடத்தைச் சுற்றிச்சென்ருர். பூசையும் மற்றநாட்களைப்போல் சாதாரணமானதல்ல. சில வேறுபாடுகள் இருந்தன. லத்தீன்மொழியில் நிருபம்வாசித்து முடிந்ததும் கிரேக்கமொழியிலும் பாடப்பட்டது. அதேபோல், சுவிசேஷமும், இரண்டுமொழிகளிலும் பாடப்பட்டது. "காணிக்கை"என்ற பகுதியும் வித்தியாசமாகஇருந்தது. ஆலயத்துக்கு வெளியேயிருந்து ஒப்புக்கொடுக்கும்பொருட்கள் கொண்டுவரப்பட்டன, மெழுகுவர்த்திகள், அப்பம், முந்திரிகைரசம், தண்ணீர், இருமணிப்புருக்கள், இருமாடாப்புருக்கள், இன்னும்சில சிறுகுருவிகள். இவைகள் பழையகாலத்தில் கிறீஸ்தவர்கள், கோவிலுக்குக் காணிக்கைகொடுக்கக் கொண்டுவந்தபொருட்களை நினைவிற்குக்கொண்டுவந்தன. பொதுவாக இவைகள் அர்ச்சியசிட்டவர்களின் புண்ணியங்களுக்கு அடையாளமாக உள்ளன. ஞானம், அன்பு, திண்மை, தூய்மைபோன்ற நல்ல பண்புகள். சமுகமாயிருந்தகருதிஞல்மார் இவைகளைப் பெற்றுப் பாப்பரசரிடம் கொண்டுசென்ருர்கள். பரிசுத்த பிதா அவைகளை ஆசீர்வதித்தார். அது முடிந்ததும் அவைகள் வெளியே எடுத்துச்செல்லப்பட்டன. பூசை முடிந்து செபம்சொல்லியபிற்பாடு, பாப்பரசர் பல்லக்கில்ஏறி அமர்ந்தார். ஆலயத்தின் முதற்குரு, வெள்ளைப்பட்டுக் காசுப்பைஒன்றை அவருக்கு அன்பளிப்புச்செய்தார். பூசையை நன்ருகப்பாடியதற்காகப் பணம்கொடுப்பது பழையகாலவழக்கம். "பேதுரு! நீ கல்லாய் இருக்கிருய்"என்ற கீதத்தைப் பாடகர்கள்பாடியபொழுது, வழமையான வாழ்த்தொலிகளிடையே, பல்லக்கில் எடுத்துச்செல்லப்பட்டார் பாப்பரசர். உள்ளேநின்றவர்களால் ஆலயத்துக்குவெளியே போகமுடியவில்லை. கதவு அடைபட்டிருந்தது. சிலநிமிடங்கள் பொறுத்துத்தான் இடிபட்டு, நெரிபட்டு வெளியேறமுடிந்தது. ஆலயமுகப்பில் அழகியபடம் ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. அதிலேபுதியபுனிதர்களும், யேசுக்கிறீஸ்துநாதரும் சித்தரிக்கப்பட்டிருந்தனர்.

**சாளரத்தின் ஊடாக:**

சதுக்கத்திலே வெப்பத்தையும் பாராய்பண்ணுது மக்கள் கூடியிருந்தார்கள். பாப்பரசர் வழக்கமாக அளிக்கும், ஞாயிற்றுக்கிழமை ஆசீர்வாதத்தையும் பெற்றுச்செல்வோம் என்ற எண்ணத்துடன் பசியைக்கூட மறந்துநின்ருர்கள். பாப்பரசரின் சன்னலில் சிவப்புச்சீலை தொங்கிக்கொண்டிருந்தது. பன்னிரண்டரைமணிக்கு வெள்ளைஉடையில் பாப்பரசர்தோன்றிஞர். திரிகாலச்செபம் ஓதாமலே அருள்பெறநின்ற மக்களை ஆசீர்வதித்தார். சாளரத்திஞடாகச் சிலநிமிடங்கள்மாத்திரம் அவரைக்காணமுடிந்தது. ஆஞல், "அவர்தான் கிறீஸ்துநாதரின்பிரதிநிதி; உலகத்தில் போர்புரியும் கத்தோலிக்க வீரர்களின் தளபதி; அப்போரில் வெற்றிக்கொடிநாட்டிய வீரர்கள்தான் அன்றுமகிமைப்பட்டம் பெற்றவர்கள்; மனிதர்களாகப்பிறந்து, மனிதர்களாகவாழ்ந்து, புனிதர்களாகஇறந்த புண்ணியர்கள்; அவர்களும், நாங்களும் கிறிஸ்துநாதரது ஞானச்சரீரத்தின் அங்கங்கள்; அவர்கள்பெருமையில் எமக்குப் புகழுண்டு; எமதுதுன்பத்தில் அவர்களுக்குக் கவலையுண்டு" என்ற உண்மை அலைகள் உள்ளக்கடலில் இலேசாகவீசத்தான்செய்தது.

---

## நாளு சங்கதிகள்

● ரோமாபுரியிலுள்ள ஐப்பானிய ஸ்தானீகராலயத்திலே வர்த்தகதூதுவராய் இருந்துவருகிறவரான திரு. ஜோன் இஸஷிஹாவா அவர்களும், அவர்பாரியாரான கிளாருவும் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்திருக்கிருர்கள்.

● ஆகாயவிமானங்களிலே குதிரைகள் கொண்டுபோகப்படுதல் இற்றைக்குப் பத்துவருடங்களின் முன்னரே ஆரம்பமாயிற்று. கடந்த பத்துவருடங்களிலும் அத்திலாந்திக்சமுத்திரத்திற்கு மேலாகமாத்திரம் சுமார் 2,000 குதிரைகள் விமானங்களில் சென்றிருக்கின்றன.

● அருளப்பபாப்பரசர் வெள்ளிப்பூணிட்ட ஓர்பிரம்பையும் கையில் கொண்டு தமது அந்தரங்க காரியதரிசியான மொன்சிஞேர் லோறிஸ் கபேவில்லா சுவாமியாருடன் தினமும் வத்திக்கான் தோட்டங்களில் உலாவிவருகின்ருர். வழமையிலே அவர் வத்திக்கான்தோட்டங்களில் ஒன்றரைமணிநேரம் செலவிடுகின்ருர்.

● வடஇத்தாலியிலுள்ள சறோன்னோஎன்ற சிறியபட்டினத்திலிருந்து ரோமாபுரிக்குப் போயிருந்த தம்முடைய சகோதரர்களின் நான்குபுதல்வர்களுக்கும், தமக்குப் பேரப்பிள்ளைகள்முறையான பதினொருபேருக்கும் பாப்பரசர் சென்றபங்குனிமாதம் 19-ந்திகதியாகிய தமதுபெயர்கொண்ட திருநாளன்று பேட்டியருளலாயினர்.

● பரிசுத்தபாப்பரசர் தாம்பெயர்கொண்ட அர்ச். சூசையப்பர்திருநாளாகிய சென்றபங்குனிமாதம் 19-ந்திகதியன்று 17-ம்முறையாக வத்திக்கானை விட்டு வெளிகொண்டு அர்ச். அப்போலினாரியுஸின்கோவிலைத் தரிசிக்கலாயினர். அதன்அயலிலுள்ள கல்லூரியிலே காலஞ்சென்ற 12-ம்பத்திநாதபாப்பானவரும், அவரும் இளமையிலே கல்விபயின்ருர்கள்.

● பிரித்தானிய மகாராணியாரின் தாயார் முன்னொருபோதுமே ரோமைநகருக்கு விஜயஞ்செய்யவில்லை. ஆஞல், மார்கறெற்இளவரசி 1949-ம் ஆண்டு ரோமைநகர்சென்று காலஞ்சென்ற 12-ம்பத்திநாதரின் பேட்டி பெற்றிருக்கின்ருர் சென்ற புதன்கிழமை இவ்விருவருக்கும் பாப்பரசர் பேட்டி அளித்தபோது பிரான்ஸிய பாஷையிலே அவர்கள்சம்பாஷித்துக் கொண்டதாகத் தெரியவருகிறது.



திரு. G. யோசவ் பொன்ராசா
அவர்களின்

## அமரதின நினைவு
### 2-வது ஆண்டு

தோற்றம் : 4-5-1921 மறைவு : 4-5-57

"வற்றுத அருளின் ஊற்றுயிருக்கிற வல்லமை பொருந்திய யேசுவே! தேவரீருடைய சரீரசத்துவமும், இருதய பலமும் அற்றுப் போய்த் திருத்தளர்ந்து எல்லாம் நிறைவேறிற்றென்று திருவுளம் பற்றினபொழுது நீர் அனுபவித்த கஸ்தியைப்பார்த்து யோசவ் பொன்ராசாவின் ஆத்துமத்தின்பேரில் இரக்கமாய் இரும்."

எங்கள் அன்பின் ஒளியாய், எம்பிரியபத்தாவாய், தயாள தந்தையாய், மனதுக்குரிய மருமகனாய் விளங்கிய ஜீ. யோசவ் பொன்ராசா அவர்கள் காத்திராப்பிரகாரம் எம்மை மாருத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு அமலனின் பாதஞ்சேர்ந்த இரண்டாண்டு நிகழும் வைகாசித் திங்கள் 4-ம்நாள் பூர்த்தியாகும். அன்றுகாலை 6-30மணிக்கு அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம், ஆசனக்கோவிலிலே ஓர் துக்கப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், இனசனநண்பர்கள், மற்றும்யாவரும் தங்கள்செபத்தில் இவரையும் நினைவுகூரும்படி பரிவாய் வேண்டுகிறோம்.

மனைவி ; திருமதி ஜெஸ்ஸி மேரி யோசவ்வின் யோசவ்

மக்கள் :

ஆன் கத்தறின் ஐடா யோசவ், அன்ரன் புஷ்பராசா யோசவ்,
மேரி கில்டா யோசவ், பிரான்சீஸ் வலன்ரைன் றபின்றராசா யோசவ்
பிரான்சிஸ்கா யெனற் லிண்டா யோசவ்

4, மருதடிவீதி, றக்காறோட்,
நல்லூர் தெற்கு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1837

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

அராலி தெற்கு
1. திருச்சிற்றம்பலம் இராஜசுந்தரமும்,
2. பெண் செல்வலட்சுமி அம்மாளும்
— வழக்காளிகள்.

எதிராக

யாழ்ப்பாணம் ரவுணில்
1. சுப்பிரமணியர் முருகேசு செல்லையாவும்,
2. பெண் குலமணியம்மாளும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1837-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1959-ம் ஆண்டு ஆனிமாதம் 4-ந்திகதி வியாழக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை : முதல்வட்டி ரூபா 11,054-உம், இன்னும் ரூபா 7,500-க்கும் 13-9-57 தொடக்கம், 31-10-57வரையும் 100-க்குப் 10%வட்டியும், பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 343ரூபா 68சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சண்டிக்குளி கோயிற்பற்று கலையூர்இறை, தாண்டவன் தறை. நிலப்பரப்பு ஒன்று (1). குளி ஒன்று (1). கல்வீடு, குசினி, கிணறு, பயிர்வகைகளும், இன்னும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை : கிழக்கு — ஏ. ஏ. செல்லத்துரைக்கும், பெண் மார்க்கிரட்டுக்கும் உரியஆதனம். வடக்கும், மேற்கும் றோட்டு தெற்கு — திருமதி எஸ். சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

35, 4 ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 29-4-59

## நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், அர்ச். அந்தோனியார், சங். அல்போன்சா சகோதரி இவர்களது மன்றாட்டாலும், எனது காணமற்போன பொருளைக் கண்டடைந்தேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். ஜி. ஒ.

மட்டக்களப்பு

## வெண்பொன் யூபிலிவிழா
### இளவாலை

ஸ்பானியதேசத்தைத் தமதுஜனன பதியாகக் கொண்டவரும், யாழ்ப்பாணமேற்றிராசனத்திலே அரிப்பு, வங்காலை, உயிலங்குளம் ஆதியாம் பல விசாரணைப்பங்குகளிலும் அருந்தொண்டாற்றியுள்ளவருமான வண. சைமன் கோமெஸ்சுவாமியவர்களின் குருத்துவ வெண்பொன் யூபிலி இளவாலை, சந்தானுள் நாயகியின் ஆலயத்தைச்சேர்ந்த அவரதுஞான மக்களால் சென்ற12-4-59 ஞாயிறுவாரம் மங்களகரமாகக் கொண்டாடப் படலாயிற்று. தங்கள்கட்டளைக் குரவரின் யூபிலிவிழாவையிட்டும், தங்கள் மத்தியில் அவர் தொண்டாற்றுங்கால் அநுவாக்கானும் பாக்கியத்தைப் பெற்றதையிட்டும் அவர்களெல்லாம் ஆனந்தவெள்ளத்தில் ஆழ்ந்தவர்களாய் அதனைச்சிறப்பாக் கொண்டாடிய காட்சி பெரும்மாட்சியாயிருந்தது.

அன்றுகாலை ஆலயத்தில் பெருந்திரளானமக்கள் குழுமியிருந்த சமூகத்திலே யூபிலிநாயகர் தேவதோத்திர பாடற்பூசை நிறைவேற்றினர். பிற்பகல் மாலையாராதனையும், "தெதேயும்" எனும் தேவதோத்திரகீதமும் பாடப்பெற்றபின் அழகுறச் சிங்காரிக்கப்பட்டிருந்த குருவர்நிவாசத்திலிருந்து யூபிலி நாயகர் வண. பி. வில்லியம் யேசுதாசன், வண. சி. மரியாம்பிள்ளை எனும் குரவர்கள்சமேதராய் வாத்தியவரிசைகளுடன் மக்கள்பெருந்திரளாகப் புடைசூழ்ந்துசெல்லச் சிங்காரமுற்றுத் தேசோமயமாய் விளங்கிய அர்ச். என்றியாசர்கல்லூரிமண்டபத்திற்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டு உயர்மேடையிலே மலர்மாலைகள்சூட்டி வரவேற்கப்பெற்றார். செல்வன் ஆபேல் பிள்ளை வாழ்த்துப்பத்திரம் படித்துக் கொடுத்தார். ஆசிரியர்கள் ஏ. சூசைப்பிள்ளை, பி. ஏ., எட்வின், பி. ஏ., என்போர் பல கையுறைகள் வழங்கினின்றனர். ஆசிரியர்திருச்செல்வம் அவர்கள் குருத்துவத்தின்மகிமையையும், யூபிலிநாயகர் 25ஆண்டுகளாக யாழ்ப்பாணமேற்றிராசனத்துக்கும், சிறப்பாக இளவாலைவிசாரணைப்பங்குக்கும் ஆற்றியுள்ள அரும்பெருந்தொண்டுகளையும் பாராட்டி உரையாற்றினர்.

## எங்கே சொர்க்கம்......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களைவகுத்துக்கொண்டு, தாங்களே வாழவேண்டும் என்ற சுயநலத்திலே அலைகின்றனர். இவர்கள்யார்? மதிப்பிற்குரிய மக்களல்ல. மக்களின்உழைப்பால் உண்டுகொழுத்தவாழும் உன்மத்தர்கள், செஞ்சீனத் தோழர்கள்.

ஏழைப் பாட்டாளிமக்களின் அழிவு, பணப்பலம் படைத்தவர்களுக்குச் செருக்கு. கொடுமைக்குக் கொட்டு முரசுகொட்டும் சீனு இன்று உலகின் கூரை எனப்படும் தீபேத்தியமக்களை மற்றொரு ஹங்கேரியாக்கி யிருக்கிறது.

### எங்கே சொர்க்கம் ?

கொலை, பறிமுதல், நாடுகடத்தல் இவைகளால் உண்டாக்கப்படும் சுவர்க்கமா பூலோகசுவர்க்கம்?

"வகுப்புவாதத்தைக்கிளப்பிச் சகோதரமனோபாவத்தை வளர்ப்போம், பலாத்காரத்தால் எங்கும்அமைதியை நிலைநாட்டுவோம்!" எனக்கூறி அவர்கள்உருவாக்கும் சுவர்க்கமா பூலோக சொர்க்கம்?

நாட்டைவிட்டுத் தப்பிஓடுபவர்களை வெடிகுண்டு, பீரங்கிகளின் உதவியால் தாக்கிக் கொடுமைப்படுத்தி அவர்களைக் கூண்டுக்குள் மிருகஇனங்களை அடைப்பதுபோல அடைத்துவைக்கும் கண்ணறுவிதானா பூலோகசொர்க்கம்? எங்கே சொர்க்கம்; எங்கேசுவர்க்கம் என்று கேட்கும் பாட்டாளிமக்களுக்கு "அங்கேசொர்க்கம், அங்கேசுவர்க்கம் என்ற ஒன்றும்இல்லையே!"எனச் சொல்லத் தோன்றுகிறதல்லவா?

உஷ்......அங்கே வெடிகுண்டுச் சப்தம்...... சைலன்ஸ்!!!

— க. சேவை

## AUCTION SALE

By virtue of the Authority to sell issued to me by the District Court of Jaffna in Insolvency Case No. 1, I shall sell by Public Auction at 10 a.m. on Saturday the 2nd May 1959 at No 4/6, Power House Road, Grand Bazaar, Jaffna all the movables of Mr. P. M. Nagaratnam Chettiar, the Insolvent.

S. Ratnasabapathy,
Provisional Assignee.

No. 35, 4th Cross Street,
Jaffna, 6th April, 1959.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், பரிசுத்த தேவதாயார், சகாயமாதாவின் குறிப்பானவர், அர்ச். அந்தோனியார் இவர்களின் விசேஷ மன்றாட்டினாலும் எனக்குள்ள வருத்தம்நீங்கிச் சுகம்பெற்றேன். நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

பி. பி. நாதன்

இளவாலை.

ஈற்றில், யூபிலிநாயகர்எழுந்து தமக்கு அருளப்பட்ட மகத்தான உபசாரணைக்கும், தமமீதுகூறப்பட்ட பாராட்டுரைகளுக்குமாக நன்றிதெரிவித்து ஆசிவழங்கினர். யூபிலிவிழா ஞாபகார்த்தமாகப் பிரதிமைப்படம் பிடிக்கப்பெற்று விழாஇனிதேநிறைவாயிற்று. இவ்விழாவைச் சீராய்ச்சிறப்பாய் முன்னின்றுநடாத்திய திரு ஆர். அந்தோனிப்பிள்ளை, திரு. எஸ். சூசைப்பிள்ளை, ஆசிரியர் எஸ் ஞானப்பிரகாசம் ஆகியோருக்கு எனது நன்றி உரித்தாகுக!

—கண்டுகளித்தோன்.

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல், எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல். — அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

## கடமையே கண்ணியமிக்கது

—: Dulcine Pais :—

வேனிற்காலத்தில் ஒருநாள். கன்னியர்நிவாசத்தின் கதவுகளின்பக்கமாக வழமைபோல இரப்போரின் கூட்டம் குழுமிவிட்டது. அங்கு ஒவ்வொர் தினமும் வறியவர்கட்குத் தர்மம வழங்குவதே அதற்குக்காரணம். அக்குழுவினர்க்குத் தானம் வழங்கும் கடமையைச் செய்துவரும் கன்னிகை சற்று நேரத்தின்முன் தான் மடத்துச் சிற்றாலயஞ்சென்றாள். தனது வாழ்க்கைப் பாதையின் தவறுகளை எண்ணி அவற்றிற்குப் பிராயச்சித்தம் செய்வதில் அங்கே ஈடுபட்டுக்கொண்டிருந்தாள் அக்கன்னிகை.

சடுதியாக அவள்முன்பாக மகிமைப் பிரதாபத்துடன் ஓர் ஒளிப்பிளம்பு தோற்றியது. கர்த்தராகிய யேசுக்கிறீஸ்து அதனுள் கம்பீரமான தோற்றத்துடன் காட்சிதந்தார். அன்பின் அரசரது இன்பகரமானதோற்றம் அக்கன்னிகையை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தியது. மட்டிலடங்காக் களிபேருவகையுடன் அவள் ஏதும் பேச அறியாளாய்த் தனது தெய்வீக அன்பரையே உற்றுநோக்கிக்கொண்டிருந்தாள்.

அவ்வமயம் மடத்தின் மணியோசை கன்னிகையின் அடுத்த கடமையை நினைவுறுத்தியது. செய்வது ஏதென்றறியாது திகைத்தாள் ஒருகணம். தனது பரலோக விருந்தாளியை மதிக்காது வெளியேறலாமா எனத் தயங்கினாள். மறுபுறம் ஏழைப்பிச்சைக்காரரிடம் தனது கடமையை அசட்டை செய்யலாமா எனச் சிந்தித்தாள். அவள் மனதில் ஒரே போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது. அத்தருணத்திலே பின்வரும் வார்த்தைகளை நினைவுகூர்ந்தாள்.

"உனது கடமையைச் செய்: அதுவே சிறந்தது; மிகுதியனைத்தையும் இறைவனிடம் விட்டுவிடு"

இப்போது அக்கன்னிகை தான் செய்யவேண்டியதைத் திட்டமிட்டுவிட்டாள். அத்தெய்வீக காட்சியை ஆலயத்திலே விட்டுவிட்டுத் தனது கடமையை நாடிச்சென்றாள்.

வழமைப்பிரகாரம் வறியவர்களின் குறைகளைத் தீர்த்தபின் அக்காட்சி மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தனது சிற்றறைக்குச் சென்ற கன்னிகையை நோக்கி அதிசயமொன்று காத்திருந்தது அந்த அறையில் அவளது ஆத்மீக அன்பர் தமது அன்பான புன்னகையுடன் அவளுக்காகக் காத்திருந்தார். மீண்டும் தன்னை ஆனந்தவெள்ளத்தில் ஆழ்த்திய அதிசயகாட்சியை நோக்கியவண்ணமிருந்த அக்கன்னிகையை விட்டுப் பிரியுமுன் கர்த்தர் கூறியதாவது:

**"நீமட்டும் உனது கடமையை அசட்டைசெய்து இங்கு தாமதித்திருப்பாயாகில் நாம்அப்போதே உன்னைவிட்டகன்றிருப்போம்."**

எமது வழக்கமான கடமைகளையும், உத்தியோகரீதியான தொண்டுகளையும், இன்னும் எம்மால் செய்யக்கூடிய நல்ல சேவைகளையும் நாம் நிறைவேற்றும்போது இறைவனின் சித்தத்தையே செய்துமுடிக்கின்றோம் நூறு ஆண்டுகட்குமுன்வாழ்ந்த ஆங்கிலக்கவிஞன் ஸ்ரக்ள் கூப்பரின் பொன்மொழிகள் இங்கு சிந்திக்கத்தக்குரியன.

"யான் துயிலிலாழ்ந்தபோது வாழ்க்கையின் அழகைக் கனவில்கண்டேன்; யான் விழித்தபோதோ வாழ்க்கை கடமையென்பதை உணர்ந்தேன்; எனதுகனவு தெளிவில்லாததொன்றோ? கடைசிமட்டும் வருந்தியுழை; உனது கனவும் நனவும் ஒன்றாகக்காண்பாய்."

—தமிழாக்கம்: சா. பெ.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 30-1959.